Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



(C/490)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 07 திங்கட்கிழமை (21.03.2011) பக்கங்கள் 12 +IV ஓசை – 172

## இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினை; புதுடில்லியில் உயர்மட்ட மாநாடு

### இணக்கத் தீர்வை உருவாக்க அமைச்சர் டக்ளஸ் முயற்சி

(கொழும்பு)

நீண்ட நாட்களாகத் தொடரும் இந்திய-இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து சுமூகமான தீர்வு காண்பதற்காக புதுடில்லியில் உயா மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் இருபத்தியெட்டாம் திகதி முதல் இரண்டு நாட்கள் நடைபெறும் என்று எதிர்பார்க் கப்படும் இந்த உயர்மட்ட மாநாட்டுக்கான ஏற்பாடு கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக இந்திய மற்றும் இலங் கைக்கடற்தொழிலாளர்கள் சங்கங்களின் பிரதி நிதிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது. கொழும்பில் நடைபெறவிருக்கும் இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

வடபகுதிக்கடற்பரப்பில் கடற்தொழிலாளர் கள் நீண்டகாலமாக எதிர் நோக்கிவரும் மேற்படி பிரச்சினைகளுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## நிலப்பரப்பில் திடீர் வெடிப்பு; மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு

### புவி ஆராய்ச்சியாளர் ஸ்தலத்துக்கு விரைவு

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு அண்மையில் கடந்த சனிக்கிழமை நிலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வெடிப்பின் ஊடாக நீர் வந்தவண்ணமுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அடி மட்டத்திலிருந்த நீர் மேல் மட்டத்திற்கு வந்தமையினாலேயே குறித்த வெடிப்பு இடம்பெற்றுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

பூரண சந்திரனின் தாக்கத்தினால் அடி மட்டத்திலிருந்த நீர் மேல் மட்டத்திற்கு வந்திருக்கலாம் என அனர்த்த முகாமைத்துவ நிலைய பேச்சாளரொருவர் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# லிபியா மீது கூட்டுப்படைகள் தாக்குதல்; சர்வதேச சமூகம் கடும் சீற்றம்

### புனிதப்போருக்கு தயார் -கடாபி ஆவேசம்



(திரிப்போலி)

**லிபியாவுக்கு எதிராக மேற்குலக கூட்டுப்படைகள் நடாத்திவரும் மும்முனைத்தாக்குதல்களுக்கெதிராக சர்வதேச நாடுகள் பல கடும் கண்டனம் தெரிவித் துள்ளன. அதிகரித்துவரும் இக்கண்டனங்களுக்கு மத்தியிலும் லிபியா மீது நடாத்தப்பட்டுவரும் இத்தாக் குதல்களை எதிர்கொள்வதற்கும் அவற்றை முறியடிப் பதற்கும் தாம் தயாராக இருப்பதாக லிபிய அதிபர் கேணல் கடாபி அறிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் ஒப்பு தல் கிடைத்ததன் பின்னணியில், லிபியா மீது அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுப் படையினர் கடும் விமானத் தாக்குதலை மேற் கொண்டமைக்கு இந்தியா உட்பட சர்வதேச ரீதியாக கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள் ளது. அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து ஐரோப்பிய நாடுகளின் (11 ஆம் பக்கம் பார்க்க)

## காலியில் இரட்டைக்கொலை; படைச்சிப்பாய்க்கு விளக்கமறியல்

(கொழும்பு)

காலி -அஹங்கமவில் இரு இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்தமை தொடர்பாக விசாரிக்கப்பட்டு வரும் இராணுவச் சிப் பாய் ஒருவரையும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு வரையும் மார்ச் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி மேலதிக நீதிவான் உத்தரவிட் டுள்ளார்.மேற்படி இளைஞர்களில் ஒருவர் கடந்த வியா ழனன்று உயிரிழந்ததுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சியின் செயற்குழு இன்று கொழும்பில் கூடுகிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு இன்று கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தின் போது நடைபெற்று முடிந்த உள் ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப் பினர்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அமைச் சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.


மகாநகர சபை, நகரசபை மற்றும் பிரதேச சபை களுக்கான பிரதிநிதிகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - மாலைதீவு இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவு என்பன இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிரான நட வடிக்கைகளை மேற் கொள்ளத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு கைச்சாத்தான இருதரப்பு உறவுகளுக்கு அமையவே பயங்கரவாதத் திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க இரு நாடு களும் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பரஸ் பரம் இரு நாடுகளுக்கு (11 ஆம் பக்கம் பார்க்க)

# சூடுபிடிக்கிறது தலைமைப்பதவிப் போட்டி; அவசரமாகக் கூடுகிறது ஐ.தே.கவின் செயற்குழு



### இரண்டில் ஒன்று இன்று தெரியும்


(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் காணப்பட்ட தலைமைப்பதவிக்கான போட்டி மீண்டும் சூடுபிடிக்க ஆரம் பித்துள்ளது.

இதற்கான பலப்பரீட்சைக்களமாக இன்று நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட டம் அமையவுள்ளது. இதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேம தாஸாவுக்குமிடையில் கடும் பலப் பரீட்சை நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரின் போட்டியாளரான சஜித் பிரேமதாஸ ஆகியோர் மத்தியில் யார் தலைவர் என்ற விடயம், இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சி யின் செயற்குழுவின் போது தீர் மானிக்கப்படவுள்ளது

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, தானே ஐக்கிய (11 ஆம் பக்கம் பார்க்க)



# கொழும்புத்துறை– மணியம் தோட்ட மக்கள் மின்சார வசதி செய்து தருமாறு கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை-மணியம் தோட்டப் பகுதியில் மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த இருப்பிடங்களை அமைத்து வசித்து வரும் மக்கள், தாம் மின்சார வசதி இன்றி இருளில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் தமக்கு மின்விநியோக வசதியை ஏற்படுத்தித் தருமாறு அந்த மக்கள் கோரியுள்ளனர்.

இந்த மின்சாரம் தற்போது கொழும்புத்துறை துறைமுகச் சந்தி வரை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(25)

# கிளிநொச்சியில் கணினிப் பயிற்சி

(கிளிநொச்சி)


மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் லக்ஷ்மன் கதிர்காமர் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள தொழில்பயிற்சி அதிகாரசபைக் கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இதில் யாழ்.இந்திய உயர்ஸ்தானிகராலய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், திருமதி சுகந்தி கதிர்காமர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

15 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தின் மூலம் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகள் பயனடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# தெற்கே செல்கிறது சின்ன வெங்காயம்



(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் இருந்து சின்ன வெங்காயம் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. சின்ன வெங்காயத்தின் அறுவடை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து அதன் விலை திடீரென சரிந்ததை அடுத்து தென்பகுதிக்கான ஏற்றுமதி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

தென்பகுதியில் இருந்து வரும் வியாபாரிகள் இந்த வெங்காயத்தை அதிகளவில் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர்.

சந்தைகளில் இந்த வெங்காயம் கிலோ 60 ரூபாவாக சரிந்து காணப்படுகிறது. அதேசமயம் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ 120 ரூபாவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. (25)

# வடக்கில் கண்ணிவெடிகளற்ற பகுதிகளில் மீளக்குடியமர்வு

## இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தகவல்



(கொழும்பு)

யாழ்.தெல்லிப்பளை மற்றும் ஏனைய கிராம சேவகர் பிரிவுகள் மூன்றில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

வடக்குப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள், நிலக் கண்ணிவெடிகள் மற்றும் பொறி வெடிகள் உள்ள பகுதிகளில் விரைவாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவடைந்ததும், மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அவர்களுக்குரிய காணிகளில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

மீளக்குடியேறிய மக்கள் வெடிபொருள் குறித்து எச்சரிக்கையாகவும், அவதானத்துடனும் இருக்க வேண்டும் என மீளக்குடியேறிய மக்களை இராணுவ ஊடகப் பேச்சாளர் உபய மெதவல கேட்டுக்கொண்டுள்ளார்.

# பின்தங்கிய கிராமங்கள் நம் மத்தியில் இருப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தில் பின்தங்கிய கிராமங்கள் என்று ஒன்று இருக்கவோ, உருவாகவோ இடமளிக்கப்போவதில்லை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கிளிநொச்சி ஊற்றுப்புலம், சோலைநகர் பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் அபிவிருத்தியில் ஏற்பட்ட சமநிலையற்ற போக்கும், வள ஒதுக்கீடுகளில் காணப்பட்ட பாரபட்சமும்தான் இவ்வாறான பின்தங்கிய கிராமங்கள் உருவாகக் காரணமாகும். எனவேதான், இந் நிலைமையினை மாற்றி கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடின்றி சமநிலையான அபிவிருத்திச் செயற்பாட்டினை முன்னெடுத்து, எதிர்காலத்தில் பின்தங்கிய கிராமங்கள் என ஒன்று இருப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும், அதற்காக தானும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும், செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களும் அக்கறையோடு செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மக்களின் தேவைகள், அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வுகளைக் காணும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம் மக்கள் சந்திப்பு நிகழ்வில், மக்கள் தங்களுடைய பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

மக்களின் தேவைகளைக் கவனத்தில் எடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள், ஊற்றுப்புலம் பாடசாலையில் கணினி, தையல் பயிற்சிகளை பயிற்றுவிக்கும் ஆசிரியைகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கும், பாடசாலைக்கான குடிநீர் விநியோக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், தளபாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் சோலைநகர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதற்கும், ஊற்றுப்புலப் பாடசாலை மாணவர்களுக்கு கழுத்துப்பட்டிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

மேலும், ஊற்றுப்புலத்தில் உள்ள சேவை நிலையத்தினை யு.என்.டி.பி.யுடன் தொடர்பு கொண்டு இரண்டு வாரகாலத்தில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கும், பாலம் மற்றும் பொதுக்கிணறு, முன்பள்ளிக்கான மலசல கூட வசதிகளை மறுநாளே நேரில் உரிய அதிகாரிகளை அனுப்பி மதிப்பீடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், ஊற்றுப்புலம் குளத்தைப் புனரமைப்பதற்கும், சோலைநகர், ஊற்றுப்புலம் கிராமங்களை மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் உள்வாங்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஊற்றுப்புலம், சோலைநகர் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வுகளில் ஊற்றுப்புலம் பாடசாலை அதிபர் சந்திரவதனி, கிராம அலுவலர்களான சிவனேசன் சபாரத்தினம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் (ஜீவன்), கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் முருகானந்தன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச தொடர்பாளர்கள் தங்கராசா, தில்லைவேல், சபாநாயகம், கிளிநொச்சி அழகியற் கலாமன்ற அதிபர் விஜயசேகரன் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஆயுர்வேத மருத்துவர்கள் விண்ணப்பம் அனுப்பலாம்

(யாழ்.நிருபர்)

ஆயுர்வேதத் திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் சேவையின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் ஆயுர்வேத சித்தி அல்லது யுனானி மருத்துவம் பற்றிய ஐந்தாண்டு பாடநெறியைப் பயின்று, பெற்ற பட்டத்துக்குப் பின்னர் ஒரு வருட உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து ஆயுர்வேத மருத்துவ மன்றத்தில் பதிவு செய்துள்ள மருத்துவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏப்ரல் 15 இற்கு முன்னர் ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், பழைய கொட்டா வீதி, நாவின்ன, மகரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பகுதிகள்என்று குறிப்பிடுதல் வேண்டும் என ஆயுர்வேதத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (10)

# சமாந்தரமாகச் சவாரி; பொலிஸார் நடவடிக்கை


(கோப்பாய்)


வலி.கிழக்குப் பிரதேசத்திலும் சைக்கிளில் சமாந்தரமாகப் பயணம் மேற்கொண்டவர்களுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

பிரதான வீதிகளில் சமாந்தரமாகச் சைக்கிளில் பயணம் செய்வதனால் விபத்துக்கள் ஏற்படுவதோடு, போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதாகவும் பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர். ஆகையால், வீதியில் சைக்கிளில் பயணம் செய்யும்போது சமாந்தரமாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இதை மீறுவோர்மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(25)

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவ நிகழ்வுகளின் சில காட்சிகள்...







உலகில் நிகழும் குறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிராதே. நீ பேசிப் பேசி குறைகளாலேயே நிரப் பப்படுவாய். குறைகளுக்காக வருத்தப்படு.

- சுவாமி விவேகானந்தர்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## குறைபாடுகள் நீங்கட்டும்

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவிவரும் பல்வேறு குறைபாடுகள் குறித்து நாளாந்தம் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இத்தகைய குறைபாட்டுச் செய்திகள் அனைத்தும் வைத்தியசாலை நிர்வாகிகளின் நிர்வாகத்தில் ஏற்பட்டு வரும் பலவீனத்தின் பிரதிபலிப்பாகவே காணப்படுகின்றன.

குறைபாடுகளைப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் போது, அக்குறைபாடுகளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டும்.

வைத்தியசாலை நிர்வாகிகளின் ஏனோதானோ என்ற மனப்பாங்கும், அவற்றில் கரிசனை காட்டத் தவறும் போக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறும் போக்கும் அப்பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையைப் பொறுத்த வரையில் அங்கு பல்வேறு குறைபாடுகள் நிலவி வருவதைக்காண முடிகிறது.

பௌதிக வளப்பற்றாக்குறை, வைத்திய நிபுணர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், சிற்றூழியர்கள் போன்றவற்றில் பற்றாக்குறை நிலவி வருவதை எவரும் மறுக்க முடியாது.

மருந்து வகைகளில் தட்டுப்பாடோ, வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவையிலோ பெரும் குறைபாடுகள் நிலவி வருவதாகத் தகவல்கள் இல்லை.

ஆனால், விடுதிகளில் இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும், அவர்களைப் பார்வையிட வரும் உறவினர்கள், நண்பர்கள் படும் அவஸ்தைகளையும் கண்ணால் காணும்போது, மனம்படும் வேதனையைச் சொல்லில் அடக்க முடியாது.

வைத்தியசாலைக் கடமையிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களினாலேயே இவர்கள் பல சிரமங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

வன்னியில் இருந்து சிகிச்சை பெறுவதற்காகவும், விடுதியில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களையும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மனித நேயமற்ற முறையில் நடத்துவதை வைத்தியசாலை நிர்வாகம் அறிந்து கொள்ளாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. ஆனால் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் போக்குவரத்துக் கஷ்டங்களையெல்லாம் சகித்துக் கொண்டு வரும் பார்வையாளர்களிடம் அடாவடித்தனமாக நடந்து கொள்ளும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அவர்களது அடையாள அட்டைகளைப் பறித்தெடுக்கும் சம்பவங்களும் அவர்களால் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

அது மட்டுமல்ல, அம்புலன்ஸ் வண்டி மூலம் கடுமையான நோயாளர்களைக் கொண்டு வரும்போது அவர்களை ஸ்ரெச்சர்களில் தூக்கிச் செல்வதற்கு சிற்றூழியர்கள் எவரையும் அங்குகாண முடியாதிருக்கிறது. அம்புலன்ஸ் வந்ததும், அவர்கள் ஓடி ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் மரணங்கள் சம்பவிக்கவும் இடமுண்டு.

இத்தகைய சம்பவங்கள் நிர்வாகத்தினருக்குத் தெரியாமல் இருக்கமாட்டாது. விடுதிகளில் நிலவும் இடநெருக்கடிகள், சுகாதாரச் சீர்கேடுகள் இவற்றையெல்லாம் வைத்தியசாலை நிர்வாகிகள் சென்று பார்க்க வேண்டும்.

அம்புலன்ஸ் வண்டிகளில் கொண்டுவரப்படும் நோயாளர்களைக் கவனிப்பதற்கு அங்குள்ள அவசியமானவர்களைப் பொறுப்பாக நியமித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உயிருக்காப் போராடிக் கொண்டு உங்களைத் தெய்வமாக எண்ணிவரும் நோயாளர்களின் நலன்களில், தேவைகளில் வைத்தியசாலை நிர்வாகம் கூடிய கரிசனை கொள்வது அவசியம் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

-ஆசிரியர்-

# அமைச்சர் டக்ளஸின் முயற்சியினால்
# தரம் 10,11 வகுப்பினை நடத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்புனித சென்.றோக்ஸ் றோ.க. வித்தியாலயத்தில் தரம் 10, 11 வகுப்புக்களை ஆரம்பிக்க வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இவவகுப்புக்களை இவ்வாண்டு, முதல் நடத்துமாறும் அந்த அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வருடங்களுக்கு முற்பட்ட காலபகுதியைக் கொண்ட இவ்வித்தியாலயத்தில் தரம் 10, 11 ஆம் வகுப்புக்கள் நடத்தப்படாமல் அப்பகுதியில் உள்ள மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

மாணவர்கள் தேவை தொர்டர்பாக பெற்றோர்களும், ஆசிரியர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கடந்த வரும் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, மாகாணக் கல்வி அமைச்சிடம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடமும் மேற்படி வகுப்புக்களை நடத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோளையடுத்தே இவ்வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனுக்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கும், மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்துக்கும் வித்தியாலய அதிபருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வலய மட்ட விளையாட்டு போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டி முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு-

**பூப்பந்தாட்டம்**

**19 வயது ஆண்**

யாழ்.ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம்.

**19 வயது பெண்**

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**கிரிக்கெற்**

**19 வயது ஆண்**

யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி, யாழ்.நெல்லியடி ம.ம.வித்தி, யாழ். ஹாட்லிக் கல்லூரி.

**19 வயது பெண்**

யாழ்.நெல்லியடி ம.ம.வித்தி, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**கரப்பந்தாட்டம்**

**15 வயது பெண்**

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சென்.தோமஸ் றோ.க.த.க. பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**15 வயது ஆண்**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம், யாழ்.ஹாட்லிக் கல்லூரி.

**19 வயது பெண்**

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வல்வை மகளிர் வித்தியாலயம், யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**19 வயது ஆண்**

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், யாழ்.வல்வை சிவகுரு வித்தி, யாழ்.ஹாட்லிக் கல்லூரி.

**17 வயது ஆண்**

யாழ்.உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ்.தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தி, சிதம்பராக் கல்லூரி.

**17 வயது பெண்**

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சென்.தோமஸ் றோ.க. த.க.பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**வலைப்பந்தாட்டம்**

**15 வயது பெண்**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**17 வயது பெண்**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (109)

## அகற்றப்படும் இராணுவ முகாம்

(வடமராட்சி)

சுன்னாகம் சந்தியில் அமைந்துள்ள காவலரண் இராணுவத்தினரால் நேற்று முதல் அகற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக சுன்னாகம் சந்தியில் வங்கிக்கு அருகாமையில் அமைந்துள்ள இக்காவலரண் இராணுவத்தினரின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது இக்காவலரண் இராணுவத்தினரால் அகற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டப் பாடசாலைகளில நடப்பாண்டில் கட்டட நிர்மாண, திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள கட்டட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது ஏற்பாட்டில் யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் இடம்பெறும் இச்சந்திப்பில் கட்டட ஒப்பந்தகாரர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பாடசாலை வேலைப் பகுதி பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பொறியியலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 88 இந்திய உழவு இயந்திரங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் வருடம் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற்செய்கையில் இந்திய அரசின் உதவியின் கீழ் வழங்கப்பட்ட 88 உழவு இயந்திரங்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாக கமநல சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந் நெற்செய்கைக்கு ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கும் உழவு இயந்திரங்களுடன் இவ் உழவு இயந்திரங்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும், இதனூடாக நெற்செய்கைக்கான உழவுக் கூலியை 75 வீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இதனை கமநல அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருவதாக கமநல சேவைத் திணைக்களம் தெரிவிக்கின்றது. (28)

## ஆயுர் வேத வைத்தியசாலை அமைத்துத் தருமாறு கோரிக்கை


(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆயுாவேத வைத்தியசாலை ஒன்று நிறுவப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் வைத்திய தேவைகளை பெற்றுக் கொள்ளும் வகையில், இவ் வைத்தியசாலை அமைக்கப்படுதல் அவசிய தேவை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயுர்வேத மருந்து வகைகளைப் பெறுவதற்கு பல மைல் தூரம் சென்று தென்மராட்சிப் பகுதிகளில் மருந்துகளைப் பெற வேண்டியுள்ளதாகவுள்ளது. இது பெரும் சிரமமானதென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பகுதியில் ஆயுர்வேத வைத்தியசாலையை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)



சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் பாடிய "திருமுறைச் செல்வம்" மூவர் தமிழ்த் தேவாரத் திருப்பதிக இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் அவரிடமிருந்து பாழ்ப்பாணம் பாரத் ஸ்ருடியோ நிர்வாக முகாமையாளர் முதலாவது பிரதியைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

# நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கான மக்களின் ஆணையை ஜனாதிபதி நிறைவேற்றுவார்!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது மக்கள் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நேற்று முன்தினம் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

எதிர்க் கட்சியினர் ஜனாதிபதியின் மீதும் அவரது அரசாங்கத்தின் மீதும் சுமத்தி வந்த குற்றச்சாட்டுகள் நம்பத்தகாதவையாக இருக்கின்றன என்று தீர்மானித்து எதிர்க்கட்சிகளை இத் தேர்தலில் தோல்வியடையச் செய்த மக்கள் அரசாங்கக் கட்சிக்கு பேராதரவை அளித்து, கையாலாகாத எதிர்க்கட்சிகளுக்குத்தக்க பாடத்தைப் புகட்டியுள்ளார்கள்.

இது வரையில் அறிவிக்கப்பட்டிருக்கும் 234 உள்ளூராட்சி மன்றங்களில், தேர்தல் முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 205 உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக அதிகாரத்தையும், இலங்கை தமிழரசுக் கட்சியின் தேர்தல் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 12 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி 10 உள்ளூராட்சி மன்றங்களிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 உள்ளூராட்சி மன்றங்களிலும் மலையக மக்கள் முன்னணி ஒரு உள்ளூராட்சி மன்றத்திலும் வெற்றிபெற்று மலையக அரசியலில் ஒரு புதிய அரசியல் சக்தியாக உருவாகி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தப் புதிய அரசியல் மாற்றங்கள் நாட்டு மக்களின் அரசியல் முதிர்ச்சியை பறைசாற்றுவதாக அமைந்திருக்கிறது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனக்கு இருக்கும் மக்கள் ஆதரவை நிரூபித்துக் காட்டியிருக்கிறது. உட்கட்சிப் பூசல் காரணமாக பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது ஓரளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக விளங்க வேண்டிய இக்கட்சி இன்று மூன்றாம் நிலைக்கு மக்களால் தரங்குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தியாக விளங்கி வரும் நாம் விரைவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வோம் என்று பாராளுமன்ற ஜனநாயக சுதந்திரத்தின் மீது திடீரென்று ஏற்பட்ட மோகத்தினால் தான்தோன்றித்தனமான முறையில் துள்ளிக் கொண்டிருந்த ஜே.வி.பியினர் இந்தத் தேர்தலில் படுதோல்வியடைந்து மண்கௌவிவிட்டார்கள். இனிமேல் அவர்களில் ஒருவருக்காவது பாராளுமன்ற உறுப்பினராவதற்கு கூட வாய்ப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஜே.வி.பியின் அழிவுக்கு அக்கட்சி மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் மீது நம்பிக்கை வைக்காமல் காளாணைப் போன்று திடீரென்று தோன்றிய அன்றைய எதிர்க்கட்சியின் பொது வேட்பாளரை ஆதரித்து மக்களின் ஆத்திரத்தை வாங்கிக் கட்டியதே பிரதான காரணமாகும்.

எதிர்காலத்தில் எதிர்க் கட்சியினர் ஜனாதிபதி அவர்கள் மீதும் அன்னாரது அரசாங்கத்தின் மீதும் பொறுப்பற்ற முறையில் ஆதாரமற்ற போலிக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, மக்களை ஏமாற்றுவதற்கு சதித்திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சி செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எங்கள் நாட்டை பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்டெடுத்திருக்கும் உதாரணபுருஷரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்தத் தேர்தல் வெற்றியின் மூலம் தமக்களிததிருக்கும் மக்கள் ஆணையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, இந் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துமககள் வாழ்க்கையில் அமைதியையும் மகிழ்சிசியையும் மனநிறைவையும் ஏற்படுத்தி, எங்கள் தாய் நாட்டைத் தேனும் பாலும் ஊற்றெடுக்கும் ஒரு சுவர்க்கபுரியாக மாற்றுவார் என்பது திண்ணம். (நன்றி இணையம்)

## கணிதத்தில் புதிர்ப்போட்டி வடமராட்சி வலயம் ஏற்பாடு

(பருத்தித்துறை)

வலயமட்ட கணித புதிர்ப் போட்டி மேமாதம் நடைபெறவுள்ளதால் பாடசாலை மட்ட கணித புதிர்ப் போட்டிகளை நடத்தி முடிவு விபரங்களை ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் தமிழ் மொழியில் 50 மாணவர்களுக்கு ஒருவர் வீதமும் ஆங்கிலமொழியில் 25 மாணவர்களுக்கு ஒருவர் வீதமும் தெரிவு செய்து அனுப்பவேண்டும்.

இதில் தரம் 6 முதல் 10 வரையான மாணவர்கள் தேசியமட்டப் போட்டிக்குச் செல்வார்கள் எனவும், தரம் 11 தேசிய மட்டப் போட்டியில் சேர்க்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் தேசிய மட்ட கணிதப் புதிர்ப் போட்டி யூலை மாதமும், மாகாணமட்டப் போட்டி யூன் மாதமும் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (109)

## சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்,பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

**ஆண்கள்** 20 கிலோ மீற்றர், 1ஆம் இடம் சண்முகநாதன் சுதா கரான்(நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக்கழகம்), 2ஆம் இடம் இராசகுமார் டிபன் (இருபாலை கலைவாணி விளையாட்டுக்கழகம்), 3ஆம் இடம் பாக்கியநாதன் ராகுலன் (அச்சுவேலி செல்வா விளையாட்டுக்கழகம்), **பெண்கள்** 10 கிலோமீற்றா 1ஆம் இடம் கதிர்காமநாதன் செந்துஜா(நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்),2ஆம் இடம் தயாராசா அனுஷா (நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்), 3ஆம் இடம் சந்திரகுமார் சுகன்யா(நீர்வேலி ஐககிய விளையாட்டுக் கழகம்) (08)

## மாற்றுவலுவுள்ளோர் தேவை மதிப்பீட்டுப் பணி ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

யாழ்மாவட்டத்தில் உள்ள மாறறுவலுவுள்ளோருக்குரிய தேவைகள் பற்றிய மதிப்பீட்டுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடைபெறும் இம்மதிப்பீட்டின் போது மாற்று வலுவுள்ளோரைச் சந்தித்து அவர்களுக்கு என்ன வகையான தேவைகள் உள்ளன எவ்வகையான உதவிகளை வழங்க முடியும் என்பது தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு வருகிறது. (10)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வைத்திய அதிகாரி டாக்டர் கு.பாலச்சந்திரன் தலைமையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளுமாறு உப செயலாளர் க.ஜெயச்சந்திர மூர்த்தி அறிவித்துள்ளார்.

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு அங்கு சபாச(கீரி)ப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபட்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

கன்னாதிட்டி காளி கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவாகம கிரியஜோதி சிவஸ்ரீ சி.ஜோதீந்திரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் அருளுரை முற்பகல் 11.30 க்கு நடைபெறும் (10)

## பயிற்சிப்பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார செயற்பாட்டுக் குழுக்களின் தலைவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப்பாசறை நிறுவன மண்டபத்தில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி வகுப்பில் சண்டிலிப்பாய் பிரதேச தொழில் திணைக்கள அலுவலர் ரி.நீலாம்பரன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கி வருகிறார்.

இப்பயிற்சி வகுப்பில் யாழ். பிரதேசம், பருத்தித்துறை, தீவகம். குளமங்கால், இளவாலை போன்ற இடங்களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒருங்கிணைந்த மனித அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை நிறுவன மண்டபத் தில் சாவமத தலைவர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர், அருட்தந்தை ஜெயநீலன், பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (21)

## முந்திரிகைப்பழம் கிலோ 400 ரூபா

(கொக்குவில்)

குடாநாட்டு முந்திரிகைப் பழங்கள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கிலோ ஒன்று 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது. அதேவேளை முந்திரிகைப் பழங்களின் வருகையும் அருகிக காணப்படுகிறது. இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட பச்சை மற்றும சிவப்பு நிற முந்திரிகைப் பழங்கள் கிலோ 500 ரூபாவில் இருந்து 600 ரூபா வரை விலை போயிருந்தது.

கடந்த காலங்களில் குடாநாட்டு முந்திரிகைப் பழங்கள் இந்தளவுக்கு அதிகப்படியான விலைக்கு விற்கப்படவில்லை என்பது கவனிக்கக் கூடியது. (68)

## அடிக்கல் நாட்டல்

(கொக்குவில்)

யாழ்.இரண்டாம் குறுக்கு வீதியில் புதிதாக யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரிக்கு நிர்மாணிக்கப்படும் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். அரச அதிபர் திரு மதி இமெல்டா சுகுமார் ஜெய்க்கா நிறுவனப் பிரதம பணிப்பாளர், தேசியக்கடற்றொழில் மற்றும், கடலோட்டு இயந்திரவியல் நிறுவனத்தினர் உதவிப்பணிப்பாளர் மாணவர்கள் முன்நிலையில் இந் நிகழ்வு நடைபெற உள்ளது. (68)



யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் ஆ.விவேகானந்தனின் சேவைநலம் பாராட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை கனகசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அதிபருக்கு ஆசிரியர் ஒருவர் அன்பளிப்பினை வழங்குவதையும் இந் நிகழ்வில் கலந்து கொண்டோர்களையும் காணலாம். (மிதிலன்)

# கிளிநொச்சி மாவட்ட நெற்காணிகளை மீளாய்வு செய்ய திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நெற்காணியின் அளவு தொடர்பாக கிளிநொச்சி கமநல சேவைகள் திணைக்களம் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து எமக்குக் கிடைத்த தகவலொன்று தெரிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த பெரும்போக நெற்செய்கையின்போது அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் இந்த மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நடவடிக்கை காரணமாக மீளக்குடியமர்ந்த பல விவசாயிகள் பாதிக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தது.

எதிர்வரும் சிறுபோக நெற்செய்கைக்கு முன்னதாக இம் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதனைக் கிளிநொச்சி, கண்டாவளை, ஊரியான் விவசாயிகளும் உறுதி செய்தனர்.

கடந்த பெரும்போக நெற்செய்கையின்போது கிளி.கண்டாவளை, ஊரியான் கமக்காரர் அமைப்பினர் இவ்வாறான விதை நெல், உர மானியம் மற்றும் விவசாய நிலம் பண்படுத்தல் தொடர்பான சேவைகளில் துஷ்பிரயோகம் மேற்கொண்டதன் காரணமாக அந்த அமைப்பு கலைக்கப்பட்டு, எதிர்வரும் சிறுபோகத்திற்கு முன்னதாக புதிய அமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும், இது போன்று வரும் காலங்களிலும் துஷ்பிரயோக நடவடிக்கைகள் இடம்பெறாமல் தடுக்கும் நோக்கிலேயே இம் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## கடலோட்டப்போட்டி முடிவுகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கடல்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு -

பாடசாலை மாணவர்கள் -

கடலில் நடத்தல்

கீழ்ப்பிரிவு - தியோனிஸ், நரேந்திரன், நகுலேந்திரன்.

மேற்பிரிவு

அ.விஜய், அ.டயூறியன், நா.அஜித்.

நீச்சல் போட்டி

ஜோன்ரீட், அன்ரன் டினேஸ், நிசாந்தன்.

பழைய மாணவர்கள்

நீச்சல்

வின்சன், கமில்ரன், ராஜா.

வள்ளம் தாங்குதல்

கௌடிகுழு, றொக்சன் குழு, ராஜாமணி குழு.

கடலில் கயிறு இழுத்தல்

வைவ்ஸ்ரார் குழு, மின்னல் குழு. (21)

## முருங்கைக்காய் கிலோ 500 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது முருங்கைக்காயின் சீசன் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஒரு கிலோ 500 ரூபாவுக்கு விற்பனையாகின்றது.

முருங்கைக்காய் முற்றுவதற்கு முன்பே சிலர் அதைப் பிஞ்சிலேயே பிடுங்கிச் சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது இந்த முருங்கைக் காய்க்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## சுண்டிக்குழி பழைய பூங்கா வீதியை காபற் வீதியாக மாற்றுவதற்கு திட்டம்

(கொழும்புத்துறை)

சுண்டிக்குழி பழைய பூங்கா வீதியை காபற் வீதியாக மாற்றியமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்த வீதியின் இரு பக்கங்களும் வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்து வரும் சில நாட்களில் இவ் வீதிக்கு காபற் போடும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுண்டுக்குழி சந்தியிலிருந்து கடற்கரை வீதி வரை இந்தக் காபற் போடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

### ஆதினியின் இன்றைய பலன்

21.03.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 07

இராகுகாலம் 7.47– 9.17, சுபநேரம் 12.17 –1.47

துதியை, மரணயோகம் மு.இ.7.46, அத்தம், சித்தம் காலை 7.27, சித்திரை பி.இ.5.54, முதலாம் பங்குனித் திங்கள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– போசனை மிகுதி, சலவை அதிகரித்தல், பணமுடை.

ரிஷபம்:– தனவிருத்தி, உதவிகள் செய்தல், மகிழ்ச்சி.

மிதுனம் :– சாதனை செய்தல், பாராட்டப்படல், மகிழ்ச்சி.

கடகம்:– சோம்பல் மிகுதி, மறதியால் கேடு, காரியத்தடை.

சிம்மம்:– முரண்படுதல், முயற்சி தடங்கல், வெறுப்படைதல்.

கன்னி :– மகிழ்வான செய்தி, பண வருகை, உறவினர் கொண்டாட்டம்.

துலாம் :– மனப்பயம், கற்பனை மிகுதி, சோர்வு.

விருச்சிகம்:– விதண்டாவாதம், குடும்பத்தில் பிணக்கு, அச்சநிலை.

தனுசு:– மகிழ்ச்சி, பிறரை மதித்தல், கௌரவம் உயர்தல்.

மகரம்:– காரிய சித்தி, மன மகிழ்ச்சி, சுபச்செலவு.

கும்பம் :– கலகலப்பான போக்கு, முயற்சி பலிதம், தனவரவு.

மீனம்:– பகைவளர்ச்சி, துன்ப மேலீடு, உணர்ச்சிவசப்படல்.

## பூம்புகார் பகுதி மக்களுக்கு பவுசர் மூலம் குடிநீர் வசதி

(யாழ்ப்பாணம்)

அரியாலை பூம்புகார் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் தேவையான குடிநீரினை நல்லூர் பிரதேச சபை பவுசர்கள் மூலம் வழங்கி வருகின்றது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நல்லூர்ப் பிரதேச சபை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் அமைப்பாளர் அ. ரவீந்திரதாசன் ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக நல்லூர்ப் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலனின் உத்தரவின் பேரில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## கல்வித்திணைக்கள அலுவலகங்களை படையினர் ஒப்படைக்க நடவடிக்கை

(வடமராட்சி)

மாங்குளத்தில் பலவருடங்களாக படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த கல்வித் திணைக்களத்தின் வலயக்கல்வி அலுவலகங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை கல்விப் பணிப்பாளரினால் பொறுப்கேற்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான துணுக்காய் கல்வி வலய அலுவலகம், மாங்குளம் மகா வித்தியாலயம் மற்றும் மத்திய நிலையம் என்பன இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (100)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வர்த்தக நிலையங்களில் எலக்ரோனிக் தராசுகள்

(கோப்பாய்)

யாழ். குடாநாட்டில் அநேகமான வர்த்தக விற்பனை நிலையங்களில் எலக்ரோனிக் தராசுகள் நிறுத்தல் அளவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த எலக்ரோனிக் நிறுத்தல் கருவிகளைப் பயன்படுத்துவதால் அளவுகளில் ஏற்படும் சிரமங்கள் தவிர்க்கப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் தற்போது அதிகமான வர்த்தக நிலையங்களில் இந்த எலக்ரோனிக் நிறுத்தல் கருவிகள் பயன்படுத்துவதால் தராசு படிகள் மெல்ல மெல்ல அருகி மறைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

## தேங்காயின் விலை குறைந்தபாடில்லை

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை தினமும் அதிகரித்துச் செல்வதால் நுகர்வோர் விசனம் தெரிவித்தனர்.

கடந்த வாரத்தில் குறைந்தது 50 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று திடீரென 60 ரூபாவாக உயர்ந்துள்ளது.

தேங்காயின் இந்த விலை அதிகரிப்பால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம் தென்மராட்சி மற்றும் தீவுப்பகுதிகளிலிருந்தும் யாழ். நகருக்குத் தேங்காய்கள் எடுத்துவரப்படுவது குறைந்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ச.தொ.ச. விற்பனை நிலையத்தில் தேங்காய் ஒன்று 35 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (25)

## மிருசுவில் றோ.க.த.கவில் தரம் 9 இற்கு மேல் வகுப்பு நடத்த கல்வியமைச்சு அனுமதியளித்தது

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் றோ.க.த.க பாடசாலையில் தரம் 9 இற்கு மேல் வகுப்புக்களை நடத்துவதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படடுள்ளது.

இதுவரை ஆண்டு 9 இற்குப் பின்னர் இம்மாணவர்கள் தூர இடங்க ளுக்குச் சென்றே கல்வி கற்கும் நிலை காணப்படுவதாகவும், சில மாணவர்கள் தரம் 9 உடன்படிப்பை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பாடசாலையின் அருகிலுள்ள திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்கள் இதனால் பெரும் நன்மையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், தென்மராட்சிப் பிரதேச இணைச் செயலாளர் குமார் சர்வானந்தா மற்றும் யாழ். ஆயர் இல்லத்தினரும் எடுத்த முயற்சியின் பயனாகவே இந்த அனுமதி கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)





யூனியன் இன்சூரன்ஸ் நிறுவனத்தால் கடந்த 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் பங்குபற்றிய யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா, கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது யூனியன் இன்சூரன்ஸ் நிறுவனப் பிராந்திய முகாமையாளர் சுகுணன், மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (மி)

## இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க துபீசன் போராடியும் பலனில்லை

# வீரர்களின் போரில் வென்றது மகாஜனா



போட்டியின் சிறப்பாட்டக்கார் விருது




சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது



சிறந்த களத்தடுப்பாளர் விருது





துபீசன்

(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போரில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் துடுப்பாட்ட வீரர் துபீசன் தனித்து நின்று போராடிய போதும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று நிறைவடைந்த இரண்டு நாட்களைக் கொண்ட இந்த இனிங்ஸ் போட்டியில் இனிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் மகாஜனாக் கல்லூரி அபார வெற்றிபெற்றது.

விக்கெட் இழப்பின்றி எட்டு ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. கோகிலன், டிலக்சன், வைகுந்தன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறி ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாவது இனிங்ஸூம் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்திருந்தது. இருப்பினும் ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிந்தவண்ணமிருந்த வேளையிலும், மிக நிதானமாக, அணியின் நிலையை உணர்ந்து ஆடிய கே. துபீசனின் போராட்டம் வீணானது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 56.5 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று, இனிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் 160 பந்துகளை எதிர்கொண்ட கே. துபீசன் ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் கே. புருஷோத்மன் 20, கே. றோபேட் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இரண்டாவது இனிங்ஸூம் மிகச் சிறப்பாக பந்து வீசிய எஸ். கோகிலன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் எஸ். டிலக்சன், கே. வைகுந்தன் ஆகியோர் தலா இரண்டு, எஸ். அஜித், கே. மோசிகீரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மகாஜனாக் கல்லூரியின் அணித் தலைவர் கோகிலன் தெரிவானார். மற்றும் சிறந்த பந்து வீச்சாளராகவும், சிறந்த சகலதுறை வீரராகவும் இவரே தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக மகாஜனாக் கல்லூரி அணியைச் சேர்ந்த கே. கபிலனும், சிறந்த களத் தடுப்பாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் தலைவர் கே. புருஷோத்மனும் தெரிவானார்கள்.

மகாஜனாக் கல்லூரி முதல் இனிங்ஸ் 267. ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல் இனிங்ஸ் 76.

இப்போட்டி நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன் மற்றும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (42, 44)








வடக்கின் பெரும் போரைத் தொடர்ந்த சென் ஜோன்ஸ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில், சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றிக்குத் துணை புரிந்த அணியின் துணைத் தலைவர் ஹரிவதனன் ஆட்டநாயகன் விருதைப் பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் ஐந்து விக்கெட்டுக்களால் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## தாய் நாட்டு ரசிகர்களிடம் மன்னிப்புக்கோரிய ஷகிப் அல் ஹசன்

(டாக்கா)

தென்னாபிரிக்காவிடம் தோற்று உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியதற்காக தங்கள் நாட்டு ரசிகர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார் பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாகிப் அல்ஹசன். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: எங்கள் மீது ரசிகர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அதிக அளவில் எதிர்பார்ப்பும் இருந்தது. அதை நாங்கள் வீணடித்துவிட்டோம். உலகக் கிண்ணத் தொடர் முழுவதும் நாங்கள் சரியாக விளையாடவில்லை. அதற்காக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் தோல்வியடைந்ததற்கு குறிப்பிடும்படியான காரணம் எதுவும் இல்லை. உலகக் கிண்ணத் தொடர் முழுவதுமே எங்களின் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக அமைந்துவிட்டது என்றார்.

## கே.கே.எஸ்.பொலிஸ் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)


யூனியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் கே.கே.எஸ். பொலிஸ் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

விலகல் முறையிலான 50 ஓவர்களைக் கொண்ட போட்டி ஒன்றில் கே.கே.எஸ். பொலிஸார் அணியும் யூனியன்ஸ் அணியும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கே.கே.எஸ். அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யூனியன்ஸ் அணி 29.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தயாளன் 35, பிரசாத் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வட்டகதெனிய மூன்று, லலித்குமார, ஜோரத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கே.கே.எஸ். பொலிஸ் அணி 23 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் லலித்குமார 50 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார். (மி)



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் கடந்த வெள்ளிக்கிழமை கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஜிம்மா பள்ளி வாசலில் தொழுகையை முடித்துவிட்டு அங்கிருந்தவர்களின் ஓட்டோகிராப்பில் கையெழுத்திடுகின்றார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், 'ஏ' பிரிவில் முதல் இடத்தை பிடித்தது மகிழ்ச்சி. இருப்பினும் அடுத்து வரும் போட்டிகளில் அனைத்து வீரர்களும் ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி பாகிஸ்தானுக்கு கிண்ணத்துக் கொண்டு செல்வதற்கு போராடுவோம் எனக் குறிப்பிட்டார்.

# தினமுரசு இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள் SCORE CARD

மைதானம் : சென்னை திகதி : 20-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி இந்தியா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கௌதம் கம்பீர் | c றஸல் b ராம்போல் | 22 |
| 02) சச்சின் டெண்டுல்கர் | c தோமஸ் b ராம்போல் | 02 |
| 03) ஹோலி | b ராம்போல் | 59 |
| 04) யுவராஜ்சிங் | c&b பொலார்ட் | 113 |
| 05) எம். டோனி | st தோமஸ் b டி. பிசோ | 22 |
| 06) சுரேஷ் ரெய்னா | c ராம்போல் b சமி | 04 |
| 07) யூசுப் பதான் | b ராம்போல் | 11 |
| 08) ஹர்பஜன்சிங் | c பொலார்ட் b றஸல் | 03 |
| 09) அஸ்வின் | not out | 10 |
| 10) சகீர்கான் | b ராம்போல் | 05 |
| 11) முனாப் பட்டேல் | b றஸல் | 01 |
| உதிரிகள் | (b5, lb 2, w 9) | 16 |
| மொத்தம் | (all out : 49.1 ஓவர்கள்) | 268 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எஸ். ஸ்மித் | b சகீர்கான் | 81 |
| 02) கே.ஏ. எட்வேட்ஸ் | lbw b அஸ்வின் | 17 |
| 03) டி.எம். பிராவோ | c ஹர்பஜன்சிங் b ரெய்னா | 22 |
| 04) ஆர். சர்வான் | c அஸ்வின் b சகீர்கான் | 39 |
| 05) பொலார்ட் | c பதான் b ஹர்பஜன்சிங் | 01 |
| 06) சி. தோமஸ் | st டோனி b யுவராஜ்சிங் | 02 |
| 07) டரன் சமி | run out ரெய்னா/பட்டேல் | 02 |
| 08) றஸல் | c பதான் b யுவராஜ்சிங் | 00 |
| 09) பென் | c பட்டேல் b சகீர்கான் | 03 |
| 10) டி. பிசோ | not out | 06 |
| 11) ராம்போல் | b அஸ்வின் | 01 |
| உதிரிகள் | (lb 8, w6) | 14 |
| மொத்தம் | (all out : 43 ஓவர்கள்) | 188 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ஆர். ராம்போல் | 10 | 51 | 05 |
| றஸல் | 9.1 | 46 | 02 |
| டரன் சமி | 06 | 35 | 01 |
| டி. பிசோ | 10 | 48 | 01 |
| பொலார்ட் | 10 | 49 | 01 |


| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| அஸ்வின் | 10 | 41 | 02 |
| சகீர்கான் | 06 | 26 | 03 |
| ஹர்பஜன்சிங் | 09 | 35 | 01 |
| சுரேஷ் ரெய்னா | 02 | 12 | 01 |
| யுவராஜ்சிங் | 04 | 18 | 02 |

**80 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி. ஆட்டநாயகன் : யுவராஜ்சிங்**

## பாகிஸ்தான் வெற்றி

(சென்னை)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணி 80 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதி லீக் போட்டி நேற்று சென்னையில் பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. இதில் முதலில் ஆடிய இந்திய அணி 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவராஜ் சிங் 113 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இதில் சர்வான் 39 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ்சிங் தெரிவானார்.



ICC Cricket World Cup 2011

## - உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் காலிறுதியில் மோதும் அணிகள் விபரம் -

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்று நிறைவடைந்ததைத் தொடர்ந்து காலிறுதிப் போட்டியில் மோதும் அணிகளின் விபரம் வெளியாகியுள்ளது. இதன்படி அதன் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 01) பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத்தீவுகள் | டாக்கா | (மார்ச் 23ஆம் திகதி) | பகலிரவு |
| 02) அவுஸ்ரேலியா எதிர் இந்தியா | அகமதாபாத் | (24ஆம் திகதி) | பகலிரவு |
| 03) நியூசிலாந்து எதிர் தென்னாபிரிக்கா | டாக்கா | (25ஆம் திகதி) | பகலிரவு |
| 04) இலங்கை எதிர் இங்கிலாந்து | கொழும்பு | (26ஆம் திகதி) | பகலிரவு |

ICC Cricket World Cup 2011

## சிம்பாப்வே வெற்றி

(கொல்கத்தா)

கென்ய அணிக்கெதிரான போட்டியில் சிம்பாப்வே அணி 161 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 41ஆவது போட்டி நேற்று கொல்கத்தாவில் பகல் ஆட்டமாக நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எர்வின் 66 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய கென்ய அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் என். ஒடியம்போ ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்ட நாயகனாக எர்வின் தெரிவானார்.



# தினமுரசு சிம்பாப்வே எதிர் கென்யா SCORE CARD

மைதானம் : கொல்கத்தா திகதி : 20-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். ரெய்லர் | c ஓ. நிக்கோஸி b ஈ. ஒற்றினோ | 26 |
| 02) சகப்வா | c ஓ.ஒபூயா b என். ஒடியம்போ | 09 |
| 03) தைபு | lbw b ஓ. நிக்கோஸி | 53 |
| 04) வீ. சிமண்டா | run out சீ.ஓ. ஒபூயா | 61 |
| 05) ஆர். எர்வின் | b ஈ. ஒற்றினோ | 66 |
| 06) சிக்கும்புறா | c ரீ.மிஸ்ரா b என்கொன்டோ | 38 |
| 07) லம்ப் | not out | 17 |
| 08) உட்சேயா | not out | 19 |
| 09) கிறீமர் | | |
| 10) பிறைஸ் | | |
| 11) மொபு | | |
| உதிரிகள் | (b2, lb 3, w 15) | 19 |
| மொத்தம் | (6 w : 50 ஓவர்கள்) | 308 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஓ. ஒபொன்டா | lbw b பிறைஸ் | 23 |
| 02) டி.ஓ. ஒபூயா | lbw b மொபு | 00 |
| 03) சீ.ஓ. ஒபூயா | run out சிமண்டா | 01 |
| 04) சோ. திகொலொ | lbw b பிறைஸ் | 10 |
| 05) ரீ. மிஸ்ரா | c கிறீமர் b உட்சேயா | 04 |
| 06) ரீ.எம். ஒடோயோ | lbw b லம்ப் | 14 |
| 07) ஆர். பட்டேல் | c சகப்வா b லம்ப் | 24 |
| 08) என். ஒடியம்போ | not out | 44 |
| 09) ஒன்கொன்டோ | lbw b கிறீமர் | 06 |
| 10) ஈ. ஒற்றினோ | run out சிக்கும்புறா | 05 |
| 11) ஓ. நிக்கோஸி | c மொபு b கிறீமர் | 09 |
| உதிரிகள் | (lb 4, w3) | 07 |
| மொத்தம் | (all out: 36 ஓவர்கள்) | 147 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ஒன்கொன்டோ | 10 | 53 | 01 |
| ஈ. ஒற்றினோ | 10 | 61 | 02 |
| என். ஒடியம்போ | 10 | 58 | 01 |
| ஜே.ஏ. நிக்கோஸி | 10 | 68 | 01 |
| சோ. திகொலொ | 07 | 49 | 00 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| மொபு | 06 | 27 | 01 |
| பிறைஸ் | 07 | 20 | 02 |
| உட்சேயா | 09 | 47 | 01 |
| லம்ப் | 07 | 21 | 02 |
| கிறீமர் | 07 | 28 | 02 |

**161 ஓட்டங்களால் சிம்பாப்வே அணி வெற்றி. ஆட்டநாயகன் : எட்வின்**

அனுசரணையாளர்: நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப் பொருட்களுக்கும் தேவையான அனைத்து இயந்திர வகைகள் மற்றும் நிறுத்தல் தராசு வகைகள் அனைத்து மாபிள் கொமட் வகைகள் எல்லாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

ஸ்ரார் செரமிக்ஸ்

ICC Cricket World Cup 2011

NO. 05, Stanley Road,
Jaffna.

(C/483)

T.P: 021 5672061,
Mobile: 0772510994, 0777578277 .
Email: vimalraja 43@yhoo.com.

### அ.தி.மு.கவுடனான கூட்டணி உறவு முறிந்தது

## தமிழக, புதுவை சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடவில்லையென ம.தி.மு.க அறிவிப்பு



(சென்னை)

அ.தி.மு.கவுடன் தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் அந்தக் கட்சியுடனான உறவை முறித்துக்கொண்ட ம.தி.மு.க எதிர்வரும் தமிழக மற்றும் புதுவை சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையெனத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ம.தி.மு.க வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது -

எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தலில், ம.தி.மு.க 23 தொகுதிகளைக் கேட்டது. ஆனால், அ.தி.மு.க தரப்பில் கடந்த சில நாட்களாக 7,8,9 தொகுதிகள் தரலாமெனவும், கடைசியாக நேற்று முன்தினம் 12 தொகுதிகளைத் தருவதாகவும் கூறியது.

ஆனால், ஏற்கனவே கூறியபடி 23 தொகுதிகளிலிருந்து கீழிறங்கிய ம.தி.மு.க 21 தொகுதிகளைத் தந்தால் உடன்பாட்டிற்கு இசைவு அளிக்க முடியுமெனக் கூறியது. ஆனால் அ.தி.மு.க. பொதுச்செயலாளரின் நடவடிக்கைகளில், அணுகுமுறையில், காலம் தந்த படிப்பினைகளால் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கும் என்று ம.தி.மு.க நம்பியது, முற்றிலும் பொய்த்துப் போய்விட்டது.

அவருடைய போக்கிலும், அணுகுமுறையிலும், எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. அகந்தையும், ஆணவமும், தன்னிச்சையான அணுகுமுறையும் திட்ட வட்டமாகப் புலப்பட்டதற்குப் பிறகு, அவரது தலைமையிலான கூட்டணியில் இனித் தொடர்ந்து நீடிப்பதும், வாக்காளர்களைச் சந்திப்பதும், எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல.

இந்நிலையில், புதிதாக ஒரு அணியை அமைக்க முயலுவதோ, தனித்துப் போட்டி இடுவதோ, ஏதோ ஒரு தரப்பினரை வெற்றி பெறச் செய்வதற்கு, ம.தி.மு.க. கருவியாயிற்று என்ற துளியும் உண்மை அற்ற விமர்சனத்துக்கே வழி வகுக்கும்.

கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதைப் போல, சுயமரியாதையை இழந்து பதவியைப் பெற வேண்டிய தேவை, ம.தி.மு.க.வுக்கு இல்லை.

பெரியாரும், அண்ணாவும் உருவாக்கி வளர்த்த தன்மானத்தையும், சுயமரியாதையையும், இரு கண்களாகப் போற்றும் ம.தி.மு.க, 2011 இல் நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு, புதுவை சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மட்டும் போட்டியிடுவது இல்லை என்றும் திராவிட இயக்கத்தின் இலட்சியங்களையும், தாய்த் தமிழகத்தின் உரிமைகளையும் வென்றெடுக்கவும், தமிழ் இனத்தின் நலனைக் காக்கவும், தொடர்ந்து உறுதியோடு பயணத்தை மேற்கொள்வது எனவும் உயர் நிலைக் குழு, மாவட்டச் செயலாளர்கள், ஆட்சி மன்றக் குழு, அரசியல் ஆலோசனைக் குழு, அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது. இவ்வாறு ம.தி.மு.க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் இரட்டை வேடம் போட்ட பாரதீய ஜனதா

### விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் அத்வானியும், பா.ஜனதாவும் இரட்டை வேடம் போட்டதாக விக்கிலீக்ஸ் தகவலை மேற்கோள் காட்டி பா.ஜனதாவுக்கு எதிராக காங்கிரஸ் போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு, பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பைச் சந்தித்தபோது, எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு காங்கிரஸ் கட்சி லஞ்சம் கொடுத்ததாக விக்கிலீக்ஸ் இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது. இதையடுத்து, நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பா.ஜனதா அமளியில் ஈடுபட்டது.

இந்நிலையில், பா.ஜனதாவுக்கு எதிரான தகவலை 'விக்கிலீக்ஸ் இணையதளம் வெளியிட்டுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு கையெழுத்தான இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை பா.ஜனதா கடுமையாக எதிர்த்தது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஒப்பந்தத்தை மறுபரி சீலனை செய்வோம் என்று கடந்த 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது, பா.ஜனதாவின் பிரதமர் பதவி வேட்பாளர் அத்வானி அறிவித்து இருந்தார்.

ஆனால், கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பு, அத்வானியை அப்போதைய அமெரிக்க தூதரக அதிகாரி பீட்டர் புர்லீக் சந்தித்தார். அப்போது அத்வானி தெரிவித்த கருத்துகள் பற்றி பீட்டர் புர்லீக் எழுதிய கடிதம், "விக்கிலீக்ஸ்" இணையதளத்தில் வெளியாகியுள்ளது.

அந்தச் சந்திப்பின்போது, தாங்கள் ஆட்சிக்கு வந்தால், அணுசக்தி ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்யமாட்டோம் என்றும், சர்வதேச ஒப்பந்தங்களைத் தாங்கள் மலிவாக எடுத்துக்கொள்வதில்லை என்றும் அத்வானி கூறியதாக பீட்டர் புர்லீக் எழுதியுள்ளார். உள்நாட்டு அரசியலுக்காக, ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசியதாகவும் அத்வானி கூறியதாக அவர் எழுதியுள்ளார்.

மேலும், கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், பா.ஜனதா தேசிய செயற்குழு உறுப்பினர் சேஷாத்ரி சாரி, அப்போதைய அமெரிக்க தூதரக அதிகாரி ராபர்ட் பிளேக்கிடம் தெரிவித்த கருத்தும் 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தில் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுக்கு அடிபணிவதாக காங்கிரசை குற்றஞ்சாட்டி பா.ஜனதா இயற்றிய தீர்மானத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளவேண்டாம். அரசியல் லாபத்துக்காக, அப்படித் தீர்மானம் இயற்றினோம் என்று சேஷாத்ரி கூறியதாக, விக்கிலீக்ஸ தெரிவித்துள்ளது.

விக்கிலீக்ஸ் தகவல்களை நம்பவேண்டாம் என்று காங்கிரஸ் எச்சரித்தபோதிலும், அதைப் புனிதமாக பா.ஜனதா கருதியது. இப்போது, அவர்களின் காலடியிலேயே செருப்பு வந்து விட்டது. விக்கிலீக்ஸ் தகவலை வைத்து, தேவையில்லாமல் நாடாளுமன்றத்தை பா.ஜனதா ஸ்தம்பிக்க வைத்தது.

அதே அளவுகோலை பா.ஜனதா தனக்கும் பொருத்திக் கொள்ளுமா என்பது குறித்து நாட்டு மக்களுக்கு பா.ஜனதா விளக்கம் அளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மணிதிவாரி கூறினார்.

## முன்னாள் பிரதமர் ராஜீவையும் குற்றவாளி என்கிறார் பிரதமர்

### அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)



தனது புதுக் கொள்கையின்படி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் குற்றவாளியாக பிரதமர் மன்மோகன் சிங் சித்திரித்துள்ளார் என பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி குறிப்பிட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு நம்பிக்கை வாக்கெடுப்பின்போது அரசுக்குச் சாதகமாக வாக்களிக்க எம்.பி.க்களுக்கு பணம் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்த பிரதமர் மன்மோகன் சிங், குற்றச்சாட்டு எழுப்பியவர்களை அடுத்த மக்களவைத் தேர்தலில் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்றார்.

இது குறித்துத் தனது இணையதளத்தில் அத்வானி குறிப்பிட்டுள்ளதாவது -


தேர்தலுக்கு முன் குற்றம் இழைத்தவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் அந்தக் குற்றத்திலிருந்து அவர் விடுபட்டவராக எப்போதிலிருந்து கருதப்படுகிறது?

பிரதமர் கூறிய இதுபோன்ற அபத்தமான கொள்கை எப்படிப்பட்ட மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் உணர்ந்துள்ளாரா?

1989 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன், போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாக ராஜீவ் காந்தி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. தேர்தலில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் புதிய கொள்கைப்படி, போபர்ஸ் விவகாரத்தில் ராஜீவ் காந்தி குற்றவாளி என மக்கள் தீர்ப்பளித்துள்ளனர் எனப் பொருள் கொள்ளலாம் என்பதை அவர் உணர்ந்துள்ளாரா?

இவ்வாறு அவர் விளக்கம் அளித்துள்ளது அந்த விவகாரத்தை மூடி மறைக்கும் செயலாகும். பாகிஸ்தான் விஷயத்தில் தனது அரசிலேயே அவர் தனிமைப்படுத்தப்பட்டது விககிலீக்ஸ் தகவலில் அம்பலமாகியுள்ளது. பயங்கரவாதம் உள்ளிட்ட பல விஷயங்களில் மக்கள் கருததை மதிப்பீடு செய்தால் மக்களிடம் இருந்தும் அவர் தனிமைப்பட்டுள்ளது தெரியவரும் என்று அத்வானி தெரிவித்துள்ளார்.




## இன்று வெளியிடப்படுகின்றது அ.தி.மு.க வேட்பாளர் பட்டியல்



(சென்னை)

அ.தி.மு.க. சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பட்டியல் இன்று வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பாக ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -


அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இன்னும் முழுமை அடையாத நிலையில் உள்ளது.

இதனால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கழக வேட்பாளர்கள் பட்டியலில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளதால், புதிய வேட்பாளர்கள் பட்டியல் இன்று வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுவரை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கழக வேட்பாளர்கள் யாரும் தங்களுடைய வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் அதிகாரபு,ர்வ வேட்பாளர்களின் புதிய பட்டியல் இன்று வெளியான பின்னர், கழகத்தின் சார்பில் நிறுத்தப்படும் அனைத்து அதிகார பூர்வ வேட்பாளர்களும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணிக்குள் தங்களுடைய வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு மத்திய அரசை வலியுறுத்துவோம்

### தி.மு.க தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு



(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தி.மு.க தொடர்ந்து வலியுறுத்துகிறது என தி.மு.க தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. தேர்தல் அறிககையை முதல் அமைசசர் கருணாநிதி அண்ணா அறிவாலயத்தில் வெளியிட்டார். அதனை தி.மு.க பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் பெற்றுக் கொண்டார்.

பின்னர் தேர்தல் அறிக்கையை தி.மு.க தலைவர் கருணாநிதி வாசித் தார்.

மேலும் அவ்வறிக்கையில், ஈழத்தமிழர்கள் அமை தியான சூழலில் வாழ்வ தற்கு உரிய உறுதியான நடவடிக்கைகளை இலஙகை அரசு மேற்கொள்ள தீவிர முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை தொடர்பான நிபுணர்குழுவின் அறிக்கை கடுமையானதாகவே இருக்குமெனத் தகவல்

(கொழும்பு)

ஐ.நா பொதுச்செயலருக்கு ஐ.நா நிபுணர்கள் குழு வழங்கவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கை கடுமையானதொன்றாகவே இருக்கும் என்று கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாட்டு இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வாரஏடு ஒன்றுக்கு அந்த இராஜதந்திரி தகவல் வெளியிடுகையில்,

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கை தயாரிப்புப் பணி பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது.

இந்த அறிக்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நடுநிலையான - அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படலாம்.

நிபுணர்கள் குழுவின் முடிவுகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த அறிக்கை பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்க்கிறது.

இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு ஐ.நா பொதுச்செயலருக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்கும்.

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கை இந்த மாத இறுதியில் பான் கீ மூனிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இதுவரை இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதா இல்லையா என்று தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

ஐ.நா நிபுணர்கள் குழுவை இலங்கை அரசுப் பிரதிநிதிகள் நியூயோர்க்கில் சந்தித்த விவகாரத்தை இரகசியமாக வைத்திருக்கவே இருதரப்பும் விரும்பின.

ஆனால் ஊடகங்கள் அதை வெளிக்கொண்டு வந்த பின்னர் இருதரப்பும் இப்போது இந்தச் சந்திப்பு மற்றும் அதில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து மழுப்பலான பதில்களைக் கூறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணிலின் ஆட்சியை பாதுகாக்க முயற்சி செய்தது இந்திய அரசு

## என்கிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு இந்திய அரசாங்கம் முயற்சி செய்ததாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த இந்தியா முயற்சித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென இந்தியா, சந்திரிகாவிடம் வலியுறுத்தியுள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க வின் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு பல்வேறு வழிகளில்





முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவிற்கும், முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டான்டுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆதாரம் காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி சபைத்தேர்தலில் இருந்ததையும் இழந்த ஜே.வி.பி

## அமைச்சர் விமல் கிண்டல்



(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் இருந்த சபையை இழந்தது மட்டுமல்ல, எதிர்க்கட்சி ஆசனத்தைக் கூட ஜே.வி.பியால் தக்கவைக்க முடியாமற் போய்விட்டதாக அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று அரசில் அமைச்சராக உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கேலி செய்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 94ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து 34நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு இன்று ஒரு உள்ளூராட்சி சபையைக்கூடக் கைப்பற்ற முடியாமற்போயுள்ளது மட்டுமல்ல, கடந்த பல வருடங்களாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த திஸ்ஸமஹாராமகம உள்ளூராட்சிச் சபையையும் இழந்து நிற்கின்றது இம்மன்றை இழந்தாலும் எதிர்க்கட்சியைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை. அந்த எதிர்க்கட்சி ஆசனத்தை ஐ.தே.கட்சி கைப்பற்றியுள்ளது. ஜே.வி.பி ஒரு ஆசனத்தை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணுமின் உலைகளால் மிகப்பெரும் ஆபத்து இலங்கைக்கு

## எச்சரிக்கிறார் கலாநிதி சுமதிபால

(கொழும்பு)

தென்னிந்தியாவில் உள்ள அணுமின் உலைகளால் இலங்கை மிகப்பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளதாக கொழும்பு திறந்த பல்கலைக் கழகத்தின் பௌதீகத்துறை விரிவுரையாளர் கலாநிதி எல் சுமதிபாலா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கான ஆபத்து யப்பானின் அணுமின் உலையின் வெடிப்பால் அல்ல. அது இந்தியாவின் பாதுகாப்பு குறைந்த அணுமின் உலைகளால் தான் ஏற்படும் உலகிலேயே மிகவும் பாதுகாப்பான அணு மின் உலைகள் யப்பானில் தான் உள்ளன. அதற்கே இந்த நிலை என்றால் இந்தியாவின் அணுஉலைகள் தொடர்பில் நாம் பேசத்தேவையில்லை

இந்தியா தனது அணுமின் உலைகளை தென்னிந்தியா மற்றும் கேரளா ஆகிய பகுதிகளில் நிறுவியுள்ளது. அவற்றில் ஏற்படும் விபத்துக்கள் இலங்கையைக் கடுமையாகப் பாதிக்கும்.

யப்பானில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் இலங்கையை நேரிடையாக பாதிக்கப்போவதில்லை. நேரடியற்ற தாக்கங்கள் நீண்டகாலத்தில் இருக்கலாம். பூமியில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்கள் இந்தப் பிராந்தியத்தில் பூமி அதிர்வைத் தோற்றுவிக்கும் சாத்தியங்களை அதிகரித்துள்ளது. எனவே இந்தியாவின் அணு உலைகளால் மிகப்பெரும் ஆபத்துக்களை நாம் எதிர்கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார.

# மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டுக்கள் நல்லிணக்கம் ஏற்படுவதை பலவீனமாக்கும்

## அமெரிக்காவிற்கான இலங்கைத்தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டுகளால் பலவீனப்படுத்தப்பட்டுவிடும் என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இலங்கை மீது குற்றச்சாட்டுகளை முன் வைப்பதை தவிர்த்து, இலங்கை விடயங்கள் குறித்து கலந்துரையாடுமாறு சர்வதேச மன்னிப்புச் சபையிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை



யின் இலங்கை பிரதிநிதி ஊடாக அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் போதுமான அளவு முன்வந்துள்ளது. அதற்கான சர்வதேச ஆதரவை மக்கள் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# டெங்கு நோய்த்தாக்கத்தால் உயிரிழந்தோர் தொகை உயர்வு

(கொழும்பு)

டெங்கு நோயின் தாக்கத்தினால் நேற்றுமுன்தினம் மேலுமொருவர் உயிரிழந்துள்ளதாகவும் இதன்மூலம் டெங்குத் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்தது.

இந்த மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 530பேர் இந்த நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். கடந்த ஜனவரிமாதம் 905பேரும் பெப்ரவரி மாதம் 1045பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் இதுவரை 863பேர் கொழும்பு மாவட்டத்திலும் 301பேர் கம்பஹாவிலும் 129 பேர் களுத்துறை மாவட்டத்திலும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# காணாமற்போனவர்களின் நிலைகுறித்து இலங்கை அரசு விளக்கமளிக்காதது ஏன்?

## ஆசிய மனித உரிமை அபிவிருத்தி மன்றம் கேள்வி


(ஜெனீவா)

இலங்கையில் காணாமற் போனதாகக் கூறப்படும் 5653 பேரின் நிலை என்ன என ஆசிய மனித உரிமை அபிவிருத்தி மன்றத்தைச் சேர்ந்த பூஜாபட்டேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் 16ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் காணாமற்போனதாகக் கூறப்படும் 5653 பேர் பற்றி அந்நாட்டு அரசாங்கம் இதுவரை போதிய விளக்கங்களை முன் வைக்கவில்லை. இவர்கள் தொடர்பாக ஆராய ஐ.நாவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டுமென்ற கோரிக்கைக்கும் இதுவரை உரிய பதில் அளிக்கப்படவில்லை.அத்துடன் மீள்குடியேற்றப்பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமை அங்குள்ள பெண்களுக்கு பெரும் இடையூறாக உள்ளது எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.





உள்ளூராட்சித் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. இந்நிலையில் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அம்மாவட்டத்திற்கான கட்சி ஏற்பாட்டாளர்கள் நேற்றுமுன்தினம் பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதையும் உரையாடுவதையும் காணலாம்.

# இந்திய மீனவரின் அத்துமீறிய மீன்பிடியால் ஐம்பது வீதவருமானம், உற்பத்திகள் இழப்பு

**வடக்கு வாழ் மீனவர்களும் தமிழ் நாட்டு மீனவர்களும் தத்தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் மறுதரப்பினரைச் சந்திப் பதற்குமான வாய்ப்பினை கச்சதீவுப் பெருநாள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. இவ்வாறு Union of Catholic Asian News - UCAN இணையத்தளம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. அந்தச் செய்திக் குறிப்பின் விபரமாவது,**

## வடபகுதி மீனவர்கள் கவலை

இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுவதன் விளைவாகத் தாங்கள் 50 வீதமான வருமானத்தினையும் உற்பத்தியினையும் இழந்து நிற்பதாக இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

கச்சதீவுப் பெருநாளில் இந்திய மீனவர்கள் கலந்துகொள்வதற்கு வழி செய்யும் வகையில் அவர்கள் இலங்கையினது கடற்பரப்புக்குள் நுழைவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்திருந்த போதும், இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் தங்களது கடற்பிராந்தியத்தில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுவதாக இலங்கையினைச் சேர்ந்த மீனவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

"இந்திய மீனவர்கள் எங்களது கடல் எல்லைக்குள் நுழைந்து அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என நாம் கோருகிறோம்" என இலங்கையினது வட பிராந்திய கடல்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சின்னையா தவரத்தினம் கூறுகிறார்.

நவீன மீன்பிடி இழுவைப் படகுகளின் [trawler-boats] துணையுடன் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையினது இயற்கை வளங்களைச் சிதைப்பதுதான் பிரதான பிரச்சினை என்கிறார் இவர். "இதன் விளைவாக நமது பலநூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழில் வாய்ப்பினை இழந்து நிற்கிறார்கள்" என தவரத்தினம் தொடர்ந்து தெரிவித்தார்.

மறுபுறத்தில் கச்சதீவுப் பெருநாளில் இந்திய மீனவர்களும் பங்கெடுப்பதற்கு வழிசெய்யும் வகையில் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் இலங்கை அரசாங்கம் கட்டுப்பாட்டினைத் தளர்த்தியிருக்கிறது.

இலங்கையினது வடக்கு வாழ் மீனவர்களும் தமிழ்நாட்டு மீனவர்களும் தத்தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் மறுதரப்பினரைச் சந்திப் பதற்குமான வாய்ப்பினை கச்சைதீவு பெருநாள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

இலங்கையினது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் கச்சைதீவு பகுதியிலுள்ள புனித அந்தோனியார் [Saint Anthony] தேவாலயத்தில் இடம் பெறும் இந்தப் பெருநாளில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாட்டிலிருந்து 5,000 மீனவர்கள் வருகைதந்திருக்கிறார்கள்.

1974ஆம் ஆண்டு இந்தியா தனது கட்டுப்பாட்டின் கீழிருந்த கச்சதீவினை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இருப்பினும் தமிழ்நாட்டினைச் சேர்ந்த பக்தர்கள் தொடர்ந்தும் இந்தப் பெருநாளில் கலந்துகொள்கிறார்கள். இருப்பினும் 1983 முதல் 2002ம் ஆண்டு




வரையிலான காலப் பகுதியில் இந்தத் தீவுக்கு எவரும் செல்லுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத் தினருக்கும் இடையில் தொடர்ந்து கொண்டிருந்த மோதலே இதற்குக் காரணம்.

உண்மையில் புனித அந்தோனியார் தேவாலயத்தினது பெருநாள் யூன் 13ஆம் திகதிதான் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் இந்தக் காலப்பகுதியில் கடல் கொந்தளிப்பு அதிகம் இருப்பதால் மார்ச் மாதத்தின் மூன்றாவது வாரத்திற்குப் பெருநாள் மாற்றப்பட்டிருந்தது. புனித அந்தோனியார்தான் தினமும் உயிரைப் பணயம் வைத்துக் கடலுக்குச் செல்லும் தங்களின் பாதுகாவலன் என மீனவர்கள் நம்புகிறார்கள்.

எவ்வாறிருப்பினும், மார்ச் 16ஆம் நாளன்று கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையகத் திற்குச் சென்ற இலங்கையினது மீனவர்கள், இந்திய மீனவர்கள் தங்களது கடற்பரப்புக்குள் நுழைவதற்கு அனு மதிக்கப் படக்கூடாது என்ற முறைப்பாட்டினைக் கொடுத்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள மாதகல் சென் தோமஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தையாகிய ஆனந்தகுமார் இதுவிடயம் தொடர்பான பிறிதொரு முறைப்பாட்டினை இந்திய உயர் ஆணையரகத்தில் கையளித் திருக்கிறார்.

ஒவ்வொரு வாரமும் 2,000 இந்திய இழுவைப்படகுகள் இலங்கையினது கடற்பரப்புக்குள் அத்து மீறிய மீன்பிடியில் ஈடுபடுவதாகக் கணக்கிடப்படுகிறது. இதுபோன்ற அத்துமீறிய மீன்பிடியின் விளைவாக இலங்கை ஆண்டொன்றுக்கு 500 மில்லியன் ரூபா பணத்தினை இழக்கிறது.

## பஹ்ரெய்னுக்கு செல்வதற்கு தற்காலிகமாக தடைவிதிப்பு

(கொழும்பு)

பஹ்ரெயினில் ஏற்பட்ட அசாதாரண நிலையை அடுத்து அந்நாட்டிற்கு வேலைவாய்ப்பிற்குச் செல்பவர்கள் தற காலிகமாக இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

பஹ்ரெயினில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக குவைத்திலுள்ள இலங்கைத்தூதரகம் கண்காணித்து வருகின்றது எனினும் தமது நாட்டிலுள்ள சகல வெளிநாட்டவர்களினதும் பாதுகாப்பை பஹ்ரெய்ன் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

பஹ்ரெயினிலுள்ள இலங்கையர்களை அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை எனினும் பஹ்ரெயினிலுள்ள இலங்கையர்கள் எவராவது நாடு திரும்ப விரும்பினால் அவர்களுக்குச் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஆனால் அவ்வாறு எவரும் வெளிவிவகார அமைச்சுடனோ அல்லது வேலைவாய்ப்புப் பணியகத்துடனோ தொடர்பு கொள்ள வில்லை.

சுமார் 18ஆயிரம் தொடக்கம் 20ஆயிரம் வரையான இலங்கையர்கள் பஹ்ரெயினில் பணியாற்றிவருகின்றனர் அவர்களின் நிலைமைகள் தொடர்பாக கண்காணிப்பதற்கு நடமாடும் குழுவொன்று அங்கு நிறுத்தப் பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்தது.

இதேவேளை சிறிலங்கன் விமான சேவை பஹ்ரெயினுக்கான நாளாந்த மூன்று சேவையை தற்போதும் நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு காப்புறுதி வழங்க பிரிட்டன் நிறுவனம் மறுப்பு

(கொழும்பு)

அரசாங்கம் புதிதாக அமைத்துள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அனைத்துலக கடல்சார் காப்புறுதி வழங்க லண்டன் லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவிலுள்ள லண்டன் லொயிட்ஸ் நிறுவனமே அனைத்துலக கடல்சார் காப்புறுதி, மீள்காப்புறுதிகளை வழங்கி வருகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு இந்த நிறுவனம் காப்புறுதி வழங்க மறுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நுழைவாயிலைக் காரணம் காட்டியே காப்புறுதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகத்தின் நுழைவாயில் பகுதியின் அமைப்புக் காரணமாக அதனுள் பெருமளவு மணல் சேர்ந்து மணற்பிட்டிகள் உருவாகும் வாய்ப்புகள் உள்ளன.

இது துறைமுகத்துக்குள் நுழையும் கப்பல்களுக்கு நல்லதல்ல.

அத்துடன் துறைமுக நுழைவாயிலுக்கு அப்பாலுள்ள கடலில் காணப்படும் பாறைகளும் கப்பல்களை சேதப் படுத்தி விடக் கூடும்.

இவை எதிர்காலத்தில் மேலும் வளர்வதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இவற்றின் காரணமாகவே காப்புறுதி வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகக் கட்டுமானத்தில் ஈடுபட்ட சீன நிறுவனத்திடம் இந்தப் பாறைகளை அகற்றுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டிருந்தது. ஆனால் அந்த நிறுவனம் அதற்கு மறுத்து விட்டது.

அந்தப் பாறையை அகற்றினால் ஒட்டுமொத்த அம்பாந்தோட்டை நகருக்குமே ஆபத்தானது என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அத்துடன் துறைமுகத்தை அமைப்பதற்குச் செலவிட்ட பணத்தை விட சுமார் நூறு மடங்கு அதிகமான பணத்தை அதற்குச் செலவிட வேண்டியிருக்கும் என்றும் அந்த சீன நிறுவனம் கூறியிருந்தது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு காப்புறுதி வழங்க ல்ண்டன் லொயிட்ஸ் நிறுவனம் மறுத்துள்ளதால், இங்கு கப்பல்கள் வருவது கேள்விக்குறியாகியுள்ளது.

அப்படி வரும் கப்பல்களுக்கு இந்தத் துறைமுகத்தில் ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டால் அதற்கான காப்புறுதித் தொகை கிடைக்காது.

எனவே, அனைத்துலக கப்பல் நிறுவனங்கள் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கான பயணத்தை மேற்கொள்வதற்குப் பின்னடிக்கலாம் என்று கருதப் படுகிறது.

## அரசின் கொள்கை, அபிவிருத்தியை மக்கள் முழுமையாக ஏற்றுள்ளனர்

### தேர்தல் வெற்றிகுறித்து அமைச்சர் சிறிசேன

(கொழும்பு)

அரசாங்கத்தின் கொள்கையையும், அபிவிருத்திச் செயற்பாடுகளையும் மக்கள் முழுமனதோடு ஏற்றுக்கொண்டமையே உள்ளூராட்சிமன்ற தேர் தலில் அரசாங்கம் வெற்றிபெறக் காரண மென அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசாங்கம் தனது அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எமது நன்றிகள. இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்காக சகல கட்சிகளும் ஒருமித்துப் பணியாற்று



வதற்கான நேரம் வந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் தெரிவாகிய அனைத்துப் பிரதிநிதிகளும், நாட்டின் முன்னேற்றத் திற்காகப் பாடுபட வேண்டும். அத்துடன் தெரிவான பிரதிநிதிகள் தமது பொறுப்புகள் என்ன என்பதனை உணர்ந்து, பொதுவான வேலைத்திட்டத்தில் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகள் என்ன? மக்களின்முன் பகிரங்கப்படுத்த வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையானது, மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை படைத் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் தனிமனிதவுரிமை மீறல்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக பான் கீ மூன் மூவரடங்கிய நிபுணர் குழுவை நியமித்திருந்தார்.

இந்நிலையில், வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படலாம் என குறிப்பிட்ட ஐரோப்பிய இராஜதந் திரி கூறியுள்ளார்.

வன்னிப் போரின் போது இடம்பெற்ற தாகக் கூறப்படுவது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு பான் கீ மூனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின நிபுணர்கள் குழுவை இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை இரகசியமாக வைத்திருக்கவே இருதரப்பும் விரும்பி இருந்தன.

ஆனால், இச் சந்திப்புக் குறித்து ஊடகங்கள் புகைப்படங்களுடன் செய்திகளை வெளியிட்ட பின்னர் இருதரப்பும் இச் சந்திப்புக் குறித்து திருப்திப்படும் வகையில் பதில்களை வழங்கவில்லை என இந்த ஐரோப்பிய இராஜதந்திரி கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிட முன்பு தம்மிடம் முதலில் கையளிக்குமாறு பான் கீ மூனை



கடந்த மாதம் சந்தித்த இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கேட்டிருந்தமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

வன்னிப் போரின் போது இடம்பெற்ற சர்வதேச போர் நியமங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்க செனட் சபை, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவின் தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபர்ட் பிளேக் ஆகியோர் அண்மையில் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான் சுனாமியில் இதுவரை இருபது ஆயிரம் பேர் பலி!

(டோக்கியோ)


ஜப்பானில் கடந்த 4 ஆம்திகதி ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி காரணமாக பலியானோர் பற்றி பிந்தியக் கிடைத்த தகவல்களின்படி இருபது ஆயிரம் பேரைக்கடந்துள்ளதாக ஜப்பானிய தேசிய பொலிஸ் முகவர் நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுவரை 8133 பேர் உயிரிழந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் 12, 272 பேரைக் காணவில்லை என அம் முகவரகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் மியாகி பிராந்தியத்திலேயே அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அங்கு 4882 பேர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை 15000 சடலங்களை வைத்திருப்பதற்கு தேவையான வசதிகள் தேவைப்படும் என மியாகி பிராந்திய பொலிஸ் உயரதிகாரி நவோட்டோ தகுவெச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவாட்டா பிராந்தியத்தில் 2525 பேரும், புகுசிமா பிராந்தியத்தில் 670 பேரும், இறந்துள்ளனர். அம்முகவரகம் அறிவித்துள்ளது.

## கச்சதீவைத் திருப்பித்தருமாறு கேட்கிறார் கலைஞர் கருணாநிதி



(சென்னை)

இலங்கை, இந்திய நாடுகளுக்கிடையிலான மீன்பிடித்தல் விவகாரம் தமிழக சட்ட சபைக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரங்களில் முக்கிய இடம்பெறும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தி.மு.க.வின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவைத்து உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் மு. கருணாநிதி, இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதாக கூறப்படும் விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்துள்ளார்.

அதேவேளை 1970களில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசாங்கத்திற்கு தி.மு.க. அழுத்தம் கொடுக்கும் எனவும் அவர் கூறினார்.

மீனவர்கள் கொலை, சித்திரவதை, கைதுசெய்யப்படும் சம்பவங்கள் என்பன அண்மைக்காலத்தில் வழக்கமானதாகி வருகிறது. இதற்கு ஒரேதீர்வு கச்சதீவை மீண்டும் பெறுவதுதான் எனக் கருணாநிதி கூறினார்.

## இந்திய மீனவர்கள்மீது தாக்குதல்; இந்திய அரசிடம் விளக்கம் கோரல்

### இந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய தேசிய மனித உரிமை ஆணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் நிடின் கட்காரியினால் தேசிய மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளது.கடந்த காலங்களில் சுமார் 500 தமிழக மீனவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பாரதீய ஜனதாக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதனை தடுத்து நிறுத்த மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் முனைப்புக் காட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மனித உரிமை மீறல்கள்; தொடரும் குற்றச்சாட்டுகள்

### "போரம் ஆசியா" போர்க்கொடி தூக்குகிறது

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்வதாக 'போரம் ஆசிய அமைப்பு' அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை மாநாட்டின் போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. காணாமல் போதல்கள் தொடர்பில் 5600 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திட்டமிட்ட முறையில் ஜனநாயகம் ஒடுக்கப்பட்டு வருவதாக போரம் ஆசிய அமைப்பின் பிரதிநிதி பூஜா பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

### இலங்கை-மாலைதீவு...

எதிராக மேற்கொள்ளப்படும் அரச எதிர்ப்பு பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த புலனாய்வு தகவல்களை பறிமாற்றுவதன் மூலம் சிறந்த ஒத்துழைப்பை வழங்க முடியும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சூடுபிடிக்கிறது...

தேசியக் கட்சியின் தலைவர் எனத் தெரிவித்து வருகிறார்.

இந்தநிலையில், இதுவரை காலமும், தானே தலைவராக வேண்டும் எனக் கூறி வந்த சஜித் பிரேமதாஸ, தற்போது இந்த விடயத்தில் இணக்கம் ஏற்படவேண்டும் என தெரிவித்துள்ளார்.

இணக்கம் ஒன்றின் மூலமே, கட்சியின் தலைமைப் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்று சஜித் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இன்று கூடவுள்ள, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில், இணக்கமான முறையில் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதில் இணக்கம் ஏற்படாவிட்டால், இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சித் தரப்புகள் தெரிவித்துள்ளன.

### லிபியா மீது...

விமானப்படையும் இத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. லிபியா, வெனிசூலா உள்ளிட்ட பல நாடுகளின் கடும் எதிர்ப்புகளையும் மீறி இந்தத் தாக்குதலை அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்தியுள்ளன.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியை ஆட்சியல் இருந்து மாற்றுவதற்கு பல்வேறு வழிகளில் முயற்சித்து வந்த அமெரிக்கா தற்போது லிபியாவில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியை தனக்கு சாதகமாக அது பயன்படுத்திக் கொண்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக லிபியா மீது விமானத் தாக்குதல் நடத்தி அப்பாவி பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் அனுமதியைப் பெற்றது.

இந்த அனுமதி கிடைத்ததும் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் உட்பட்ட நாடுகள் லிபியா மீது போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. திரிபோலியைச் சுற்றிலும் லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் ஆதரவுப் படையினர் வைத்துள்ள ரேடர்கள், ஏவுகணைகள் மற்றும் தகவல் தொடர்பு மையங்களை குறிவைத்து டோமஹாக் ஏவுகணைகளைக் கொண்டு அமெரிக்கா கடும் தாக்குதல்களை மேற்கொண்டதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. திரிபோலி தவிர மேற்கில் உள்ள மிசுரடா, சுர்த் ஆகிய நகரங்களிலும் தாக்குதல் நடந்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு லிபிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் முகம்மது சுவேத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் இந் நடவடிக்கையானது காட்டுமிராண்டித்தனமான அத்துமீறிய தாக்குதல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விமானத் தாக்குதலில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என இதுவரை முழுமையாகத் தெரிய வராத போதிலும், 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுவதுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.இதற்கிடையே ஜனாதிபதி கேணல் கடாபி தங்கியுள்ள மாளிகை மீது அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சத்தால் அதைத் தடுக்க அவரது ஆதரவாளர்கள் அம் மாளிகையைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் இத் தாக்குதல் நடவடிக்கையால் அரபு நாடுகளில் பெரும் பதட்டம் ஏற்பட்டுள்ளது. ஈராக் போருக்குப் பின்னர் அரபு நாடு ஒன்றின் மீது அமெரிக்கா தாக்குதல்களை மேற்கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, லிபியா மீது மேற்கத்தைய நாடுகள் நடத்தியுள்ள தாக்குதல்களை பயங்கரவாத தாக்குதல்கள் என விமர்சித்துள்ள லிபிய தலைவர் கேணல் கடாபி, இந்தத் தாக்குதல்களை தாங்கள் முறியடிப்போம் எனவும் கூறியுள்ளார்.

அரச தொலைக்காட்சியில் அவர் நேற்று ஆற்றிய உரையில், லிபிய மக்கள் அனைவரும் ஆயுதம் தரித்திருப்பதாகவும், லிபியாவின் எண்ணெய் வளத்தை மேற்கத்தையர்கள் அபகரிப்பதை தடுக்க தாங்கள் நீண்ட புனிதப்போர் ஒன்றைப் புரிய தயாராக இருப்பதாகவும் கூறினார்.

போர் தொடுத்துள்ள அண்னியப் படைகளை ஜெர்மனியின் நாசிப் படைகளோடு ஒப்பிட்ட அவர், அவர்கள் அனைவரும் கொல்லப்படுவார்கள் என்றும் சூளுரைத்தார். தலைநகர் திரிபோலி மற்றும் மிசாராடா நகரத்தில் உள்ள கிட்டதட்ட 20 வான் பாதுகாப்பு மையங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க மற்றும் பிரிட்டன் கடற்படைகள் ஏவுகணைகளை ஏவி வரும் நிலையில், பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் விமானங்களும் தாக்குதலில் ஈடுப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் பி-2 வகை விமானமும் குண்டுகளை வீசி வருகிறது.

ஏவுகணைத் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து மேற்கத்தைய இராணுவ அதிகாரிகள் அவசரமாக ஆராயவுள்ளனர். பாதிப்பின் அடிப்படையில் எவ்வகையான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து அவர்கள் முடிவெடுப்பார்கள் என்று பிபிசியின் பாதுகாப்புத்துறை தொடர்பான செய்தியாளர் ஜோனாதன் மார்க்கஸ் கூறுகின்றார்.

இதற்கிடையே, கேணல் கடாபிக்கு ஆதரவான படைகள் மிசராடா மீது புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக கிளர்ச்சியாளர்களின் சார்பில் பேசவல்ல ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார்.

லிபியாவில் இடம்பெற்று வரும் தாக்குதல்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம், அங்கு அதிகரித்து வரும் வன்முறையால் பொது மக்கள் பாதிக்கப்படுவது தமக்கு மிகுந்த கவலையை கொடுப்பதாகவும், ஆயுத பலத்தை பயன்படுத்தாமல், பேச்சுவார்த்தை மூலமே க்ருத்து வேறுபாடுகளை தீர்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.




...நகர சபை, யாழ்ப்பாணம்.



# அரசு - புலிகள் பேச்சு முறியக்கூடாது; ஒரு கட்டத்தில் இதை இந்தியா விரும்பியது

## மகிந்த ஜனாதிபதியானதும் விழித்துக்கொண்டது இந்தியா



(கொழும்பு)

கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் இந்தியா விழிப்படைவதற்கான ஒரு சமிக்ஞை என இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தவும், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதற்கும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின், இந்திய விஜயத்தை பயன்படுத்துவதற்கு இந்தியா தீர்மானித்திருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட தகவல் பரிமாற்றக் குறிப்பு ஒன்றில் இவ் விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க புலிகள் தீர்மானித்ததின் மூலம் அவர்கள் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கும், ரணில் விக்கிரமசிங்கவைப் புறக்கணிப்பதற்கும் தீர்மானித்திருந்தமை தெரிய வருவதாக இலங்கை, பங்களாதேஷ் மற்றும் பர்மா ஆகிய நாடுகளுக்கான இந்தியாவின் இணைச் செயலாளர் மோகன்குமார் கூறியிருந்ததாக இத் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கடும்போக்கான பிரசாரத்திற்கு மத்தியிலும் மகிந்த ராஜபக்ஷ ஒரு மிதவாதியாக இருப்பார் எனவும், "சமாதானமும் இல்லை போரும் இல்லை" என்ற நிலை அண்மைய காலத்தில் தொடர்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அவர் ஊகம் வெளியிட்டிருந்ததாக இத் தகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய முயற்சிக்கும் நிலையில், இந்த ஒப்பந்தம் முறிவடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதே தேர்தலுக்குப் பின் இந்தியா முன்னுரிமை கொடுக்க கொடுக்க வேண்டிய விடயம் எனவும் அவர் கருத்துத் தெரிவித்திருந்ததாக அத் தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இந்தியா விழிப்படைவதற்கான ஒரு சமிக்ஞை இது வென அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் பெண்கள் அரசியலில் மறுமலர்ச்சி

# ஐம்பது வருடங்களின் பின்பு முஸ்லிம் பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்



(கொழும்பு)

இம்முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், 50 வருடங்களுக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த முஸ்லிம் பெண்மணி ஒருவர் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடி நகர சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட சல்மா ஹம்ஸாவே இந்த பெருமையை பெற்றுள்ளார்.

இவர் காத்தான்குடி நகர சபை தேர்தலில் 1,235 வாக்குகளைப் பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் முதலிடத்தை பெற்றுக்கொண்டார்.

சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராக செயற்பட்ட காலத்தில் கல்வியமைச்சின் கிழக்கு மாகாண இணைப்பாளராக செயற்பட்ட இவர், பெண்களின் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்திக்குமான அமைப்பின் தலைவியுமாவார்.

இவர் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் சகோதரி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன், 1950 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைக்கு ஆயிஷா ரவூப் பிரதி மேயராக தெரிவுசெய்யப்பட்டார்.

ஆயிஷா ரவூபே உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட முதல் முஸ்லிம் பெண்மணியாவார்.

# மருந்துப் பொருட்கள் இறக்குமதி; இறுக்கமடையும் நடைமுறைகள்

உரிய தரத்திற்கு அமைவான மருந்துகளை இறக்குமதி செய்யாத நிறுவனங்களின் அனுமதியை ரத்துச் செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசினால் தற்போது கோரப்பட்டுள்ள சில மருந்துகள் குறிப்பிட்ட தரத்திற்கு அமைவாக இல்லாமையால், அரச மருத்துவ மனைகளில் சில மருந்துகள் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாகவே குறித்த இறக்குமதி நிறுவனங்கள் தொடர் பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது இந்தியா, தாய்லாந்து, சீனா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

# இலங்கையில் அமெரிக்க பல்கலைக்கழக விழா

இலங்கை - அமெரிக்க கல்வி அமைப்புகள் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவராலயத்துடன் இணைந்து அமெரிக்கப் பல்கலைக்கழக விழா ஒன்றினை இன்று ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பில் உள்ள விருந்தகமொன்றில் இந்த நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிமுதல் இரவு 7 மணி வரை நடத்த திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவினால் வழங்கப்படும் பல்வேறு உயர் கல்வி தொடர்பான விபரங்களை இலங்கை மாணவர்கள் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும் இந்த நிகழ்வில் அமெரிக்காவின் பிரபல பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆலோசகர்கள் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் செயற்படும் 11 பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி தொடர்பான சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தூதுவராலய தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

### காலியில்...

மற்றொருவர் காயமடைந்த நிலையில் வார இறுதியில் உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேவேளை இராணுவச் சிப்பாய் சம்பந்தப்பட்டமை தொடர்பாக இராணுவம் தனியான விசாரணை நடத்தி வருகிறது. இந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதன் பின்னர், கிராமவாசிகள் பொலிஸ் ஜீப் ஒன்றை தீக்கிரையாக்கியமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியா - இலங்கை...

சுமுகமான இணக்கத்தீர்வை எட்டும் முகமாகவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வடபகுதிக்கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை எட்டுவதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை என்றும், அக்காலப்பகுதிக்குள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தரப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மீனவசங்கங்களின் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே உறுதிமொழி வழங்கியிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே தற்போது இப்பிரச்சினை குறித்து புதுடில்லியில் உயர் மட்டமாநாடு நடைபெறவுள்ளது. இதற்கு முன்னோடியாக இந்திய கடற்தொழில் சங்க பிரதிநிதிகள் குழு ஒன்று இன்று கொழும்புக்கு வரவுள்ளது. அதேபோல் வடபகுதி கடற்தொழில் சங்க பிரதிநிதிகளும் கொழும்புக்குச் செல்லவுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான சந்திப்பு ஒன்று இந்த இருதரப்புக்குமிடையில் கொழும்பில் இடம்பெறவுள்ளது. புதுடில்லிப் பேச்சுக்கு முன்னர் மிகவும் சுமூகமான முடிவுகள் இப்பேச்சுக்களின் போது எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கண்டி மக்களிடம் சாட்சியப்பதிவு; நல்லிணக்க ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைகுழு கண்டி மாவட்ட மக்களிடம் சாட்சிப் பதிவுகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்மன் விக்ரமசிங்ஹ தகவல் தருகையில், நேற்று மலையக பெருந்தோட்ட மக்களிடமும், மற்றும் மலையக கிராமத்து மக்களிடமும் சாட்சிப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு தமது சாட்சிப் பதிவுகளை ஆரம்பித்த நாள் முதல் கண்டி பிரதேச மக்கள், தமக்கும் சாட்சிப்பதிவுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு தொடர்ந்தும் கோரிவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், கண்டி மக்களிடம் சாட்சிப்பதிவுகளை நிறைவு செய்து கொண்டு, கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல் பண்டாரவையும் சந்திக்கவுள்ளதாக ஆணைக் குழுவின் ஊடக ஆலோசகர் லக்மன் விக்ரமசிங்ஹ குறிப்பிட்டார்.

### நிலப்பரப்பில்...

இந்த நிலைமை தொடர்பாக புவி மற்றும் சுரங்க ஆராய்ச்சி சபை விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குறித்த பிரதேசத்திற்கு புவி ஆராய்ச்சியாளரொருவர் அனுப்பப்பட்டுள்ளதாக புவி மற்றும் சுரங்க ஆராய்ச்சி சபையின் தலைவர் டாக்டர் என்.பி.விஜேயானந்த தெரிவித்தார். குறித்த சம்பவம் விரும்பத்தகாத அனர்த்தம் எதனையும் ஏற்படுத்தாது என அவர் குறிப்பிட்டார்.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள பாரிய பூமியதிர்வுக்கு பின்னர், குறித்த சம்பவம் ஏற்பட்டுள்ளமையால், பொதுமக்களை கவனமாக இருக்குமாறு டாக்டர் என்.பி. விஜேயானந்த மேலும் தெரிவித்தார்.

### சுதந்திரக்...

நியமிப்பது தொடர்பிலும் மத்திய செயற்குழு ஆராயவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகள் மாத்திரமன்றி, வேறு பல விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஒழுக்கயீனமான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பிலும் இன்றைய கூட்டத்தில் போது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, 234 உள்ளூராட்சி சபைகளிலும் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி தலைமையில் உலக பௌத்த மாநாடு

## கண்டியில் நேற்று ஆரம்பம்



(கொழும்பு)

உலக பௌத்த மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கண்டி பல்லேகலேயில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

2600ஆவது புத்த வருடத்தை மையமாக வைத்து இந்திய கலாசார ஒன்றிய கவுன்சில் ஏற்பாட்டில், நேற்று ஆரம்பமான இந்த உலக பௌத்த மாநாடு இன்றையதினமும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இந்தியா, நேபாளம், வியட்நாம், இந்தோனேஷியா, இலங்கை உட்பட பல நாடுகளின் பௌத்தமத பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

# இலங்கையின் மொத்த சனத்தொகையில் 17 சதவீத மக்கள் அசுத்தநீர் பாவனை

## நீர் விநியோக அமைச்சின் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த் சனத்தொகையில் 17 சதவீமான மக்கள் சுத்தமான குடிநீர் அற்ற. நிலையில் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான குடிநீர் தண்ணீர்த் தாங்கி வாகனம் மூலம் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீர்விநியோக மற்றும் வடிகால் அமைச்சின் செயலாளர் ஏ.அபயகுணசேகர தெரிவித்துள்ளார்.

நாளை உலக நீர் தினம் சர்வதேச ரீதியாக நினைவு கூரும் நிலையில், இலங்கையிலும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்துடன் இணைந்து நீர்விநியோக அமைச்சு இதனை இலங்கையில் முன்னெடுக்க உள்ளது


அன்றைய முக்கிய நிகழ்வு பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் தலைமையில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிகழ்வில் நீர் தொடர்பான திட்டங்களைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சென்ற சமூக அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

29. ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும் நிமாலி கடந்த மாதத்திலிருந்து பாடசாலைக்கு வராததன் காரணம்.
1. கல்வியில் பின் தங்கியுள்ளதால்
2. வறுமையின் காரணமாக
3. நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதால்

30. முழு உருவின் 1/4 பகுதி மட்டும் நிழற்றப்பட்டுள்ள படம்.



i) 1 ii) 2 iii) 3 iv) 4

**இரும்பினால் செய்யப்பட்ட கூட்டில் நான் தனியாக இருக்கிறேன். உணவும் வேறு தேவைகளும் எனக்குத் தாராளமாகக் கிடைத்தாலும், மனதில் நிம்மதி இல்லை. என்னை நன்கு கவனித்தாலும் தனிமையில் கழிக்கும் இவ்வாழ்க்கையில் என்ன நன்மை. சில வேளைகளில் என்னை அறியாமலேயே பறந்து செல்ல முயற்சி செய்கிறேன்.**

31. மேற்கூறிய பந்திக்கிணங்க கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது,
1. குற்றவாளி ஒருவன் 2. பறவை ஒன்று 3. நாய் ஒன்று

32. பறந்து செல்லத் தேவையானது,
1. சிறகு 2. இறகு 3. கூடு

33. பின்வருவனவற்றுள் முலையூட்டி ஒன்று.
1. கழுகு 2. பூனை 3. முதலை

34. நன்மை என்பதற்குரிய எதிர்ச்சொல்
1. நன்கு 2. நன்று 3. தீமை

35. பந்தியில் உள்ள உலோகப் பொருள்
1. இரும்பு 2. உணவு 3. நிம்மதி

**ஒரு ஜம்பு மரத்தில் 12 பழங்களும் அதைப்போல் இருமடங்கு பழங்கள் மாமரம் ஒன்றிலும் இருந்தன. இவை யாவற்றையும் பறித்துச் சமமான 3 பங்குகளாக்கப்பட்டன.**

36. மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
.................................................................

37. மொத்தம் எத்தனை பழங்கள் பறிக்கப்பட்டன?
.................................................................

38. 3 பங்குகளாக்கப்பட்ட பின் ஒரு பங்கில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?
.................................................................

39. ஒரு பங்கிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
.................................................................

40. ஒரு பங்கிலுள்ள ஜம்புப்பழங்களின் எண்ணிக்கை யாது?
.................................................................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 06




**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**தரப்பட்டுள்ள படங்களில் வேறுபட்டுக் காணப்படும் படத்தின் கீழ்க் கீறிடுக.**

01. 

**தரப்பட்டுள்ள படங்களில் தவறாக வரையப்பட்டுள்ள படத்தின் கீழ்க் கோடிடுக.**

02. 

**பின்வரும் பந்தியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

குயிலின் ஓசையினால் முழுப் பிரதேசமும் இனிமையாயிற்று. செந்நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கின. புதுவருட காலமாதலால் மக்கள் மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடுகின்றனர். சிறியோர் முதல் பெரியோர் வரை ஊஞ்சலாட பெருவிருப்பங் கொண்டிருந்தனர். பல்வேறு பகுதிகளில் விதவிதமான ஊஞ்சல்கள் கட்டி ஆடினர்.



03. மேற்கூறிய நிகழ்ச்சி வருடத்தின் எம் மாதத்தைக் குறிக்கின்றது?
.................................................................

04. பறவைகளில் மிக இனிமையான குரலையுடைய பறவை எது?
.................................................................


05. மரங்களில் ஊஞ்சல் கட்டத் தேவைப்படுவது என்ன?
.................................................................

06. ஆடுகின்றனர் என்பது என்ன காலம்?
.................................................................

07. மிக அழகாக ஆடக்கூடிய பறவை எது?
.................................................................


08.

| | | |
|---|---|---|
| | | 9 |
| | 18 | 6 |
| 15 | 12 | 9 |


இப்படத்தில் எண்களை  என்னும் ஒழுங்கில் அடுக்கப்பட்டிருப்பின் கீழே உள்ள படத்தில் எண்கள் அடுக்கப்பட்டிருக்கும் சரியான கோலம் எது?

| | | |
|---|---|---|
| 35 | 40 | 5 |
| 30 | | 10 |
| 25 | 20 | 15 |

01. 02. 03.






09. தரப்பட்டுள்ள படத்தில் உள்ள கோலத்தைக் கவனித்து இடைவெளிக்குரிய எண்ணைக் காண்க.




1) 45 ii) 39 iii) 40

10. மிக மெதுவாகச் செல்லும் உயிரினம் எது?

A)  B)  C)  D) 


**தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமானதன் கீழ் கோடிடுக.**


11. கைத்துடைப்பானைப் பாவித்தல்
சவற்காரமிட்டுக் கைகழளக் கழுவுதல்
உபகரணங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் } (சமைத்தல்/விற்றல்)

12 முட்டையிடும்
பீங்காரமிடும்
சூழலுக்கு ஏற்ப இயங்கும் } (பறவை/எலி)

13. வளரும்
வளையும்
நிழல் தரும் } (மரம்/கொடி)

**தரப்பட்டுள்ள 'இரண்டு படங்களுடன் பொருந்தாத படத்தைத் தெரிவு செய்க.**

14.  
(i)  (ii)  (iii) 

15.  
(i)  (ii)  (iii) 





16. தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பின்வருவனவற்றுள் எவ்வெழுத்தை இட்டால் கருத்துள்ள மூன்று சொற்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| ம | தி | த |
| ற | க | கு |
| .......... | .......... | .......... |

1. ம்
2. தி
3. சி

**பின்வரும் ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை இணைக்கவும்.**

| | |
|---|---|
| 17. Good Moring | நேர்முகப் பரீட்சைகளின்போது |
| 18. Happy Birthday | புதுவருடப் பிறப்பின்போது |
| 19. Good Luck | காலை வேளையில் |
| 20. Happy New year | பிறந்தநாள் நினைவூட்டலின்போது |

**21-24 ஆகிய வினாக்களில் ஒரு சொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுக.**

21. உண்ணும் , பிடிக்கும் , ஆறும்
22. அடைதல் , ஓடுதல் , வருதல்
23. கொடுத்தல் , பெறல் , விருத்தி
24. கூறுதல் , பாடுதல் , பேசுதல்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

25. சகல மனிதர்களுக்கும் நீர் அவசியம். எனினும் நகர வாசிகள் கிணற்று நீரை அருந்த மாட்டார்கள்.
   1. நகர வாசிகள் நீரை அருந்தமாட்டார்கள்
   2. நகர வாசிகளுக்கு கிணற்று நீர் கிடைக்காது
   3. நகர வாசிகள் கிணற்று நீரை அறியமாட்டார்கள்

26. பழச்சோறு போத்தல் ஒன்றில் 750 ml பானம் உள்ளது. விருந்துபசாரம் ஒன்றில் அவ்வாறான 10 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மொத்த பானத்தின் அளவு.
   1. 7.5 l 2. 750 l 3. 7.5 ml

27. 50 சதத்தை ரூபாயின் தசமமாகக் கூறின்
   1. 0.50 2. 0.050 3. 1.50

28. இடைவெளிக்குரிய இலக்கத்தைக் காண்க.

| | | |
|---|---|---|
| அவன் என்றால் | .................................................... | 136 |
| இவன் என்றால் | .................................................... | 336 |
| எவன் என்றால் | .................................................... | ................. |

1. 536 2. 756 3. 736